தனிநாயகம் அடிகள் ஞாபகார்த்த இதழ்

அன்பளிப்பு : ரூபா 5/- பக்கங்கள் : 24

# ஆற்றல்

யாழ் ஆற்றல் மேம்பாட்டு ஒன்றியம், 76, கண்டி வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

மலர் : 01 ஆவணி AUGUST இதழ் 06

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
நூலகம்

## தமிழோடு வாழும் ஒரு துறவி,

# தவத்திரு தனிநாயகம் அடிகளார்

— நெடுந்திவு லக்ஸ்மன்

தேமதுர தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும் என்று கனவு கண்டவர் பாரதியார். அவர் கண்ட கனவை நனவாக்கியவர் **தவத்திரு தனிநாயகம் அடிகளார்.**

*1913*-ம் ஆண்டு ஆவணி ௨-ம் திகதி நெடுந்தீவில் (நாகநாதர் கணபதிப்பிள்ளை) கெனறி ஸ்ரனிஸ்லோஸ், சிசில் இராசம்மா ஆகியோரின் மகனாகப் பிறந்த சேவியர் ஸ்ரனிஸ்லோஸ் தனிநாயகம், ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியிலும், பின்னர் யாழ் சம்பத்திரிசியார் கல்லூரியிலும் கல்வி பயின்றார்.

> தனிநாயகம் அடிகள் 16 மொழிகள் கற்றவர். சுவாமி ஞானப்பிரகாசர் ஆரம்பித்த தமிழ் ஆய்வுகளைத் தொடர்ந்த சுவாமி டேவிட் உடனும், யாழ் வைத்தீஸ்வரா கல்லூரி அன்றைய அதிபரும் தமிழ் மேதையுமான அம்பிகை பாகன் உடனும், தமிழ் ஆய்வுகளில் ஈடுபட்டதுடன், 'உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடுகள், நடாத்தியவரும் ஆவார்.
>
> மலேசியாவிலது கோலாலம்பூர் நகரில் முதல் ஆராய்ச்சி மாநாடு நடைபெற்றது. இதற்கு தலைமை தாங்க, பாரபட்சம் இன்றி, ஓர் ஆங்கிலேயரை வரவேற்றிருந்தார். எமது மதிப்புக்குரித்தான அடிகளார். அவர் சுத்த தமிழில் ஆர்வங் கொண்டவர். அத்துடன் நிறுத்தாது, உலக பாஷையான ஆங்கிலத்தையும் எமது பிள்ளைகளுக்கு ஊட்டுங்கள் என வற்புறுத்தி இயங்கியவர்.
>
> ஆ[illegible]ர்

சிறு வயதிலேயே நுண்மான் நுழைபுலம் மிகுதியாகக் கொண்ட அவர் தனது பதினேழாவது வயதில் கொழும்பில் உள்ள குருமடத்தில் இணைந்து மறைக் கல்வியைக் கற்று, அங்கிருந்து ரோமாபுரி சென்று மறைக் கல்வியில் கலாநிதி பட்டம் பெற்றார். லத்திசகால பல்கலைக் கழகத்திற்கு 'கலாயோகி ஆனந்தக் குமாரசாமி' யின் 'சிவ நடனம்', என்ற ஆய்வு நூலையும் வழங்கிய துணிவு அவருடையது.

தமிழ் மொழியில் சிறப்பான ஆர்வம் கொண்டிருந்த தனிநாயகம் அடிகள், அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் தமிழ் சிறப்புப்பட்டம் பெற்றதுடன் பண்டைத்தமிழ் இலக்கியத்தில் 'இயற்கைக் கோட்பாடும் விளக்கமும்' என்ற ஆய்வுக் கட்டுரையைச் சமர்ப்பித்து 'இலக்கிய முதுமாணி' பட்டத்தையும் பெற்றார்.

தமிழ் ஆய்வுகள் இடம் பெற்ற பல நாடுகளில் ஆய்வுகள் தனிமனிதரால் மேற்கொள்ளப்பட்டு கவனிப்பாரற்ற நிலையில் இருந்ததைக் கண்ணுற்ற அவர், தான் தொடக்கிய தூத்துக்குடி கிறிஸ்தவ தமிழ் இலக்கிய மன்றத்தின் மூலம 'Tamil Culture, என்ற ஆங்கில ஆய்வுச் சஞ்சிகையை வெளியிட்டு தமிழ் ஆராய்ச்சியில் உள்ள குறைபாடுகளையும்

(தொடர்ச்சி 2-ம் பக்கம் பார்க்க)

## ஆகிரி பாடினால் அன்னம் கிடையாதா?

● சுந்தரலிங்கம் மாஸ்ரர்

அவர் ஒரு சிறந்த பாட்டு வித்துவான்: 'ஆகிரி' இராகத்தை அவருக்கு அப்பியாசம் செய்யவேண்டிய ஆசை வந்து விட்டது: அதிகாலை நித்திரை விட்டெழுந்தார்: காலை உணவுக்குக் கட்டுச் சாதமும் கட்டிக்கொண்டார்: அகால வேளையில் அயலவர்கள் ஆத்திரப்படாமல் இருக்க, அமைதியான இடம் தேடிக் காட்டிற்குச் சென்றார்.

அது ஓர் மூங்கில் மரக்காடு: இருந்து அப்பியாசம் செய்வதற்கு ஏற்ற இடத்தையும் கண்டு பிடித்துக் கொண்டு, எடுத்துச்சென்ற கட்டுச்சாதப் பொட்டலத்தை, அங்கு பதிந்து வளைந்திருந்த மூங்கில் மரக்கிளையொன்றில் பாதுகாப்பாகக் கட்டி விட்டு, தன்னுடைய ஆகிரி இராக ஆலாபனை ஆரம்பித்தார்: நேரம் போனதே வித்துவானுக்கு தெரியவில்லை: அந்த அளவிற்கு, வித்துவான் அந்த இராகத்தில் மெய் மறந்து தன் மனதைப் பறிகொடுத்து அது வயமாக்கப்பட்டார்.

பல மணி நேரத்தின் பின், உச்சிப்பொழுதில், தன் நிலைக்கு வந்த வித்துவானுக்கு, பசியோ வயிற்றைப் பிடுங்கியது கொண்டு சென்ற செண்டியில் இருந்த நீரைக்கொண்டு கை முகம் யாவும் அலம்பிவிட்டு, கட்டுச்சாதப் பொட்டலத்தை எடுக்க மரத்தடிக்குச் சென்றார்.


65 வருட காலம்
தொடர்ந்து இயங்கும்
ஒரே ஒரு புத்தகசாலை ஸ்தாபனம்:
ஸ்ரீலங்கா புத்தகசாலை
யாழ் நகரில்
பாடசாலை மாணவ சமுதாயத்தினர்க்கு
புத்தகங்கள், உபகரணங்கள்
தமிழ், சமயம், நாவல், இலக்கியம்,
சிறு கதைகள்:
ஸ்ரீலங்கா
புத்தகசாலை
234, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 2573


என்னே! ஆச்சரியம்! பொட்டலம் மூங்கில் மரத்தின் உச்சியில் கட்டப்பட்டிருந்தது: வித்துவானுக்குக் கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை: பனிக்குளிருக்கு பதிந்து வளைந்திருந்த மூங்கில் மரம் உச்சி வெய்யிலுக்கு நிமிர்ந்துவிடும் என்ற தன்மையை வித்துவான் அறிந்திருக்கவில்லை: 'ஆகிரி' பாடினால் அன்னம் கிடையாதா? என்ற ஏக்கத்துடன் விடு, விடு என்று வித்துவானார் வீடு போய்ச் சேர்ந்தார்.

## தவத்திரு தனிநாயகம் அடிகளார்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவற்றை ஒருங்கிணைத்து நெறிப்படுத்த வேண்டிய தன் முக்கியத்துவத்தையும், குறித்து ஆணித்தரமான ஆசிரியர் தலையங்கங்களையும் தீட்டினார்.

'எழு நிலை மாடம்
கால் சாய்ந்துக்குக்
கழுதை மேய்
பாழாகினும் ஆகும்'

என்ற அவ்வையின் கூற்றுக்கிணையான இரேசுகப் பாடல் ஒன்றை மேற்கோள் காட்டி தமிழின் இன்றைய இழிந்த நிலையை எடுத்தியம்பினார்.

1952ல் இலங்கை பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பதவியேற்ற அடிகளார் 'தமிழ்ப் பண்பாட்டுக் கழக'த்தைத் தொடக்கி தமிழின் வளர்ச்சிக்கு அருந்தொண்டு புரிந்தார்.

'24 மணி நேரத்தில், சிங்களத்தை நாட்டின் அரச கரும மொழியாக ஆக்குவேன்' என பண்டாரநாயக்காவும், அதற்குப் போட்டியாக தாங்களும் சிங்களம் மட்டும் கொள்கையையே கொண்டுள்ளதாக ஐ. தே. கட்சியும் தீர்மானம் நிறைவேற்றிய பொழுது மிகவும் கலக்கமடைந்த அடிகளார்; 'சிங்களமும் தமிழும் அரச கரும மொழியாக இருப்பதில் சிங்களத்திற்கு எவ்வித இடையூறும் ஏற்படாதெனவும், சிங்களம் அரச கரும மொழியாக இருந்தாலும் தமிழையும் சிங்களத்தின் நிலை பாதிக்காமல் பயன்படுத்தலாம்' எனவும் 'தமிழ் மொழி உரிமைகள்' என்ற தலைப்பில் ஆங்கில நூலை வெளியிட்டு உலகிற்கு உண்மை நிலையைத் தெளிவுபடுத்தியதுடன், பண்டாரநாயக்காவைச் சந்தித்து விளக்கினார். அது ஏற்றுக் கொள்ளப்படாமையால் தமிழரசுக்கட்சியினால் காலிமுகத்திடலில் நடைபெற்ற சத்தியாக்கிரகத்திலும் கலந்து கொண்டார்.

இச் சமயத்தில் அடிகளாருக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படக் கூடாதென்பதில் பொலிஸ் அதிகாரியாகக் கடமையாற்றிய சிட்னி டீ. சொய்சா கண்காணிப்பாக இருந்து பாதுகாப்பு வழங்கியமை குறிப்பிடத் தக்கது.

ஒரு கத்தோலிக்கத் துறவியாக இருந்த போதும் பொருத்தமான இடங்களில் இந்து மதக் கோட்பாடுகளை எடுத்துக் காட்டுவதில் அவருக்கு நிகர்

(தொடர்ச்சி C பக்கம் பார்க்க)

# முயற்சித் திட்டம்

## BUSINESS PLAN

'தி. தி'

ஆடி இதழில் முயற்சித்திட்டம் எப்படி அமைக்க வேண்டும் என்று விபரித்திருந்தோம். சுயதொழில் வாய்ப்பை ஏற்படுத்த அல்லது சிறுதொழில் முயற்சி அபிவிருத்திக்கான கடன்களை வங்கிகள் வழங்கும் போது. மக்கள் வங்கி, இலங்கை வங்கி போன்றவை எவ்வெவ் விபரங்களை முயற்சியாளரிடமிருந்து எதிர் பார்க்கின்றன என்ற குறிப்புக்கள் இக்கட்டுரையில் தரப்படுகின்றன:

மக்கள் வங்கியின் சுயதொழில் ஊக்குவிப்புக் கடன் திட்டத்தின் கீழ் சாத்தியக்கூற்று மதிப்பீட்டு அறிக்கை பின்வரும் விடயங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றது.

01) திட்டச் செலவு (சிபார்சு செய்யப்பட்ட தொகை) இது முயற்சியாளரின் பங்களிப்பும், வங்கியின் கடன் அளிப்பும் கொண்டது;

02) இயந்திராதிகள் / உபகரணங்கள் விபரம்;

03) ஆளணி விபரம் ; மாதாந்த வேதனம் முதலியன உட்பட.

04) உள்ளீடுகள் ; மூலப்பொருள் - மாதாந்த விபரம்

05) வாங்குவோர் / வழங்குவோர் தொகை - செலவு விபரம் (Consumers & Distributors)

06 பிரதான உற்பத்தி / சேவை அளவு ; மாதாந்த தொகை - விலை - மாதாந்த வருமானம்.

07) வருடாந்த உற்பத்தித் தொகை - விற்பனை இலாபம்.

08) செலவு விபரங்கள்;

மூலப்பொருட்கள், கூலி / சம்பளம், போக்கு வரத்து, மின்சாரம் / எரிபொருள், வாடகை ; வரி, காப்புறுதி, வருமானத்தேய்வு, பெறுமானத்தேய்வு ஏனைய செலவு விபரம் :

1 ———— ————————
2 ————————————
3 ————————————

மொத்தச் செலவு

09) தேறிய இலாபம்.

10) தவணைக் கட்டணம்.

11) கடனாளியின் பலம் பலவீனங்கள் வாய்ப்புக்கள்,

12) சந்தை - பிரதான பங்கு :
வாங்குவோர் விபரம்
விற்பனை முறைகள் - உபாயங்கள்

ஆடி மாத இதழில் குறிப்பிட்டது போன்று, இவ் இதழில் எமது ஆலோசகர் திருவாளர் திருஞானம் திருலிங்கநாதன் இக் கட்டுரையை வரைந்துள்ளார்.

இவர் முன்னாள் Deputy Director, Budget Division, General Treasury, Colombo. இவரது காலத்திலேயே இலங்கை அரசாங்கம் Programme Budgeting முறையை கடைப்பிடித்தது.

ஆகையால், சுயதொழில் முயற்சியில் ஈடுபட விரும்பியோர்க்கு அறிவுரை கூற இவர் மிகவும் பொருத்தமானவரே.

ஆ . . . ர்

13) அமைவிடம் ;
நன்மை - பலம் / பலவீனம், வாய்ப்புக்கள். அச்சுறுத்தல்கள்.

14) வங்கி மதிப்பீட்டு உத்தியோகத்தரின் ஏனைய கருத்துக்கள் ;

மக்கள் வங்கி மேற்படியான அடிப்படையில் தான் முயற்சியாளனைப் பற்றி ஆய்வு நடாத்தும்.

### கடன் பெறக்கூடிய சிறுமுயற்சிகள் விபரம் :

1; சிறுமுயற்சிகள் ; Micro - enterpriee
அ) சிறிய குடிசைக் கைத்தொழில்
ஆ) வியாபார முயற்சி :
இ) சிறு தொழில்கள் :
ஈ) மலர் வளர்ப்பு :
உ) பழமரச்செய்கை :

2) விவசாய அடிப்படையிலான கைத்தொழில்கள் Agro Industries.

3) விவசாய அடிப்படையான முயற்சிகள் :
அ) கிணறமைப்பு - அகழ் கிணறுகள் ;
ஆ) குழாய்க்கிணறு (Tubu)
இ) காற்றாடி இயந்திரம்- நீர்த்தாங்கி, வாய்க்கால்கள் அமைத்தல்.
ஈ) நிலச்சீர்திருத்தம
உ) ஏனைய விவசாயத் தொழில்கள்.

குறிப்பு :

கால் நடை உற்பத்தி, களயந்திரோபகரணம், பாற்பண்ணை, மீன்பிடி / கடற்றொழில் அபிவிருத்தி போன்றவை.

இத்திட்டத்தின் கீழ் அல்லாது பிறிதோர் கடன் வழங்கும் திட்டத்துள் அடங்கும்.

கடனாளி வயதெல்லை 18 - 40

இருபொறுப்பாளர் அவசியம்

தொடர்ச்சி 19 - பக்கம் பார்க்க

# தலைமைத்துவம்
# LEADERSHIP

T. வேல்நம்பி
விரிவுரையாளர், வர்த்தகத்துறை
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

(ஆடி இதழ் தொடர்ச்சி)

### 1. 3 தலைவர்கள் தோன்றுகின்ற தன்மையை அடிப்படையாகக் கொண்டு தலைமைத்துவத்தைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. பிறப்பினாலான தலைமைத்துவம் (Charismatic Leadership
2. மரபுரீதியான பாரம்பரிய தலைமைத்துவம் (Traditional Leadership)
3. நியமனத் தலைமைத்துவம் (Appointed Leadership)
4. தெரிவுத் தலைமைத்துவம் (Selection Leadership)

### 1. 3. 1 பிறப்பினாலான தலைமைத்துவம் (Charismatic Leadership)

இது பிறப்பிலேயே ஒருவர் கொண்டிருக்கும் ஆளுமை, செயற்றிறன் என்பவற்றின் மூலம் தோன்றுகின்ற தலைமைத்துவத்தைக் குறிக்கும் உதாரணம் - கிட்லர், நெல்சன் மண்டேலா

### 1. 3. 2 மரபுரீதியான தலைமைத்துவம் (Traditional Leadership)

அது பரம்பரை பரம்பரையாக ஒருவருக்குக் கிடைக்கும் தலைமைத்துவத்தைக் குறிக்கும். உதாரணம் - அரசபரம்பரையில் தோன்றும் தலைவர்கள்.

### 1. 3. 3 நியமிக்கப்பட்ட தலைமைத்துவம் (Appointed Leadership)

குறித்த ஒரு பதவிக்கு நியமனம் செய்யப்படுவதன்மூலம் உருவாகின்ற தலைமைத்துவமே இது வாகும்.
உதாரணம் - நிறுவன முகாமையாளர்.

### 1. 3. 4 தெரிவுத் தலைமைத்துவம் (Selection Leadership)

இதன்படி பலராலும் தெரிவு செய்யப்படுகின்ற ஒருவர் தலைமைத்துவத்தைப் பொறுப்பேற்பவராக இருப்பர்.

### 1. 4. தலைமைத்துவம் தொடர்பான கோட்பாடுகள் (Theories of Leadership)

தலைமைத்துவம் தொடர்பான கோட்பாடுகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்;

1. தலைமைத்துவப் பண்புக் கோட்பாடு / தலைமைத்துவப் பண்பு பற்றிய அணுகுமுறை Trait Theory / Trait Approach
2. தலைமைத்துவப் பாங்குக் கோட்பாடு Leadership Style Theory
3. நிலைமைக்கேற்ற தலைமைத்துவக் கோட்பாடு Contingeney Theories Sitvation Theories

### 1. 4. 1 தலைமைத்துவப் பண்புக் கோட்பாடு Trait Theory or Trait Approach

இது மிகப் பழமைவாய்ந்த அணுகுமுறையாகும்: இதன் கருதுகோள் யாதெனில் குறித்த பண்புகளை அல்லது இயல்புகளைக் கொண்டிருப்பவர்களே வெற்றிகரமான தலைவர்கள் ஆகின்றார்கள் என்பதாகும். இங்கு சிறந்த தலைவருக்கு இருக்கவேண்டிய பண்புகளாக பின்வரும் பண்புகள் குறிக்கப்பட்டுள்ளன.

1. புத்திக்கூர்மை
2. அறிவு
3. தோற்றம்
4. தன்னம்பிக்கை
5. நிர்வாக ஆற்றல்
6. முன்னெடுத்துச் செல்லும் திறன்
7. பலம்

இத்தகைய பண்புகளை சில நபர்கள் தமது பிறப்பிலேயே கொண்டிருக்கின்றார்கள் என்றும் இப்பண்புகள் அவர்களுக்கு வழங்கப்பட்ட கொடை என்றும் நம்பப்பட்டது. இவற்றின் அடிப்படையில் தலைவர்கள் பிறக்கின்றார்களே தவிர உருவாக்கப்படுவதில்லை எனக்கூறப்படுகின்றது. எனினும் சிறந்த தலைவர்களிடம் இவ் எல்லாப்பண்புகளும் காணப்படவில்லை என்பதனை ஆய்வுகள் காட்டியுள்ளன. அவ்வாறே இப்பண்புகளைக் கொண்ட எல்லோருமே சிறந்த தலைவர்களாக உருவாகியதுமில்லை. இதனால் இக்கோட்பாடு முழுமையாக ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை.

### 1. 4. 2 நிலைமைக்கேற்ற தலைமை வகித்தற் கோட்பாடுகள். Paul Hersey and Blanchad's Situational Leadership

இக்கோட்பாடானது ஊழியரது முதிர்ச்சிக்கு ஏற்ப தலைமைத்துவப்பாங்கு மாறுபடும் எனக்கொள்கின்றது. இவர்களது கருத்துப்படி முதிர்ச்சி என்பது வயதினையோ அல்லது மன உறுதியினையோ கருதாது மாறாக சாதனை செய்வதற்கான விருப்பம் பொறுப்புக்களை ஏற்பதற்கான சம்மதம் வேலை தொடர்பான ஆற்றல், அனுபவம் என்பவற்றைத்

(தொடர்ச்சி 13 - ம் பக்கம் பார்க்க)

# இசைப்பீடங்கள்

நெடுந்தீவு
சங்கீதபூஷணம்
வேலுப்பிள்ளை சுந்தரலிங்கம்

(ஆடி மாதத் தொடர்ச்சி)

## வாக்கேயக்காரர்களும், இசை பீடங்களின் தன்மையும்

கீழ்க்காணும் குறிப்புகளை கொண்டு இந்த இசைப் பீடங்களைப் பற்றிய விரிவான அறிவைப் பெறலாம்.

1. இசைப் பீடம் அமைந்திருந்த பிரதேசத்தின் புவியியல் அமைப்பும், அது அவ்வண்ணம் இசைப் பீடமாக அமையப் பெற்றதற்குக் காரணிகளாக இருந்த சுற்றாடலும்.
2. பீடமாக விளங்குவதற்கு ஏற்ற தகுதி: அதாவது உற்சாகமாக இயங்கி வருகின்றதா? எவ்வித உற்சாகமும் இன்றி அடங்கிக் கிடக்கின்றதா? அல்லது முற்றாக அழிந்த நிலையில் உள்ளதா?
3. முக்கியமான ஒரு பீடமா? அல்லது, முக்கியத்துவம் குறைந்த பீடமா?
4. இசைப் பீடமாக விளங்கி வந்த காலம்.
5. இசைப் பீடமாக அது எவ்வாறு விளங்கி வந்தது.
6. இசை, இசைக்கச்சேரி, நடனம், இசை நடனம் ஆகியவற்றுள் எதைச் சார்ந்தது?
7. இப்பீடத்தை அலங்கரித்த இசை மேதைகளும், இசை ஞானிகளும், அங்கு வசித்த இலட்சணகாரர், பாடலாசிரியர், இசையாளர், ஆதரவாளர், உரையாசிரியர் சங்கீதாசாரிகள் முதலியர்.
8. இசையைப் பற்றிய கட்டுரைகளும், ஏற்கனவே உள்ள தரமான கட்டுரைகளைப் பற்றிய உரைகளும், அந்தந்த இடங்களில் எழுதப்பட்டனவும், அவற்றின் ஆசிரியர்களும்.
9. அந்த இடத்திலேயே இயற்றப்பட்ட நடன கோலங்களும், இசை நாடகங்களும், இசைக் கச்சேரிகளும் இருப்பின்.
10. ஒரு பீடத்திலே இயற்றப்பட்ட இசைப்பாடல்களின் மூலம் பெறப்படும் இடத்தைப் பற்றிய தரவுகள்.

இந்தியாவில், தமிழ்நாடு மாகாணத்தில், சென்னை நகரில் உள்ள அண்ணாமலை பல்கலைக் கழகம்' இசை, இயல், நாடகம் ஆகிய முக்கலைகளுக்கு பிரபல்யமானது.

ஆங்கில மேதை என ஆங்கிலேயராலேயே போற்றப்பட்ட ஸ்ரீநிவாச சாஸ்திரிகள் ஆட்சியில் வளர்ந்த பல்கலைக் கழகம் 'அண்ணாமலை பல்கலைக் கழகம்'.

ரைகர் வரதச் சாரியார் தமிழ் இசைக்கு அசையா அத்திவாரமிட்டு வளர்த்து பல்கலைக் கழகம் இது.

இப்பல்கலை கழகத்தில் 'சங்கீத பூஷணம்' பட்டம் பெற்ற நெடுந்தீவு சுந்தரலிங்கம் மாஸ்ரர் வழங்கும் இக்கட்டுரை தொடராக, முழுமையாக வெளிவருகின்றது.

இசைக்கலை மாணவி, மாணவர், ஆர்வம் கொண்டோர் இதனைத் தொடர்ந்து படித்து பயனடையுங்கள்.

ஆ. . .ர்

11. அவ்விடத்தில் உள்ள கோவில்களை அழகு படுத்தும் சிற்பங்களும், இசை நடனம் பற்றிய ஓவியங்களும், சுவர் ஓவியங்களும்.
12. உருவாக்கப்பட்ட புதிய இசைக்கருவிகள்
13. பிரசித்தி பெற்ற இசை இயற்றுனரின் பிறந்த இடங்கள்,
14. அவ்விடத்தில் உள்ள இசை மேதைகளின் சமாதிகள் இருப்பின்.
15. அவ்விடங்களில் நடாத்தப்படும் இசை விழாக்கள்.
16. அவ்விடங்களில் நடாத்தப்படும் இசைக் கருத்தரங்குகள் (உண்டாயின)
17. அரங்கேற்றம் செய்யப்பட்ட மாபெரும் இசை நிகழ்ச்சிகள்.
18. அவ்விடத்தில் உள்ள இசை வளர்க்கும் தாபனங்கள், இசை சங்கங்கள், இசைக் கல்லூரிகள், இசை அக்கடமிகள் (உண்டாயின).

## இசைப்பீடம் தஞ்சாவூர்

தென்னிந்தியாவில் இசை வளர்ச்சியில் தஞ்சாவூர் மாவட்டம் மிகப் பிரகாசமான இடத்தை வகிக்கிறது. சோழ மன்னர் ஆட்சிக் காலம் தொடக்கம் 800 ஆண்டுகளுக்கு மேலாக இம் மாவட்டம் இசை, நடனம் ஆகியவற்றில் ஆர்வமும், அபிமானமும் கொண்ட அரசர்களால் ஆளப்படும் பாக்கியத்தைப் பெற்றிருந்தது.

தஞ்சாவூரைப் போல இசை வரலாற்றில் மிக உன்னத ஸ்தானம் பெற்று விளங்கிய பிறிதொரு தலத்தை எதனை இந்தியாவில் குறிப்பிட முடியாது.

(தொடர்ச்சி 16 ம் பக்கம் பார்க்க)

# ஏன்? எப்படி??

எஸ் விஜயஸ், வணிகத் துறை,
யாழ் பல்கலைக் கழகம் :

**O** ஆற்றல் சுயநல, இலாபப் பார்வை இல்லாத முயற்சி என்பதை, மகிழ்ச்சியான ஒரு சமூகப் பணியாகக் கொள்வோம். சீர்திருத்தங்களும், மாற்றங்களும் அவசியமானவை தான். ஆனால், தான்தோன்றித் தனமான மாற்றங்கள், 'பெண்' என்பதை 'Bன்' என்பது எழுந்தமானம். தமிழுக்கும் ஆங்கிலத்துக்குப் அவமானம்'

முற்பகுதிக்கு நன்றி: பிற்பகுதியை என்னவென்பது இது எனது பெயர் ஐயா, சொந்த விஷயம் இதில் தலையிடும் உமது துணிவை இப்படியும் வர்ணிக்கலாம். Fools Barge in where angls Fear To Tread உமது பெயர் எஸ் வி ஆம் தானா?

மக்ஸ்மி அரவிந்தன், எலியனாயூர் ;

**O** சென்ற நூற்றாண்டு பெண்கள் ... தற்கால பெண்கள் ஒப்பிடுக !

சகல முனைகளிலும் முன்னேற்றம் தான் பெண்கள்: அபூர்வமான இரு விஷயங்கள் :

1. சென்ற மாதம் உலக பெண்கள் உதைப்பந்தாட்ட போட்டி அமெரிக்காவில் நடந்தது: இறுதி ஆட்டத்தில் சீனாவை அமெரிக்கா (U: S. A: ) வென்றது:

2: இங்கிலாந்தில் இந்திய பெண்கள் Cricket Test Match விளையாடினர். சென்ற மாதம். மேலும், எமது நாட்டில் அம்மா, பெண்கள் தான் வாசிப்பதிலும், படிப்பிலும் முன்னணியில் நிற்கின்றனர்; அப்போ, பின்னணியினர் ..... சட்டி கழுவும் காலம் விரைவில் வரும். இருந்து பாருங்களேன்!

அருள் மதியழகன், உசன் :

**O** கடவுள் எங்கு இருக்கின்றார்? அவர் எந்த சமயத்தைச் சேர்ந்தவர்?

அவன் தூணிலும் இருப்பாண்டி ...... அவன் துரும்பிலும் இருப்பாண்டி ...... கேட்டதில்லையோ? பரந்த நோக்கம், பிறர் சிநேகிதம், போட்டியில்லா அமைதி மனம் கொண்டோரில் இருக்கின்றார், நிச்சயம். சதா காலம் அவரது! ஒரு சிறு சமயம் (நேரம்) அல்ல!!

அ. கமலநாதன், உரும்பிராய் :

**O** 08 ம் ஆண்டு படிக்கும் எனது மகன் சில பொது அறிவு வினா விடை நூல்களில் சந்திரனின் முதன் முதல் கால் வைத்தது 3 நபர்கள் என்றும், வேறு சில நூல்களில் இருவர் எனவும் உள்ளதாம், இவற்றில் சரியான விடை எது?

Apolol (அப்பொலோ பதினொன்று) 30 வருடங்களுக்கு முன்னர் மூவரையும், Eagle (கழுகு) என்னும் சந்திரனில் இறங்கும் வாகனம் ஒன்றையும் கொண்டு சென்றது. Neil Armstrong முதலில் சந்திரனில் இறங்கினார். இரண்டாவதாக Buzz Aldrin (பஸ் அல்ட்றின்) கால் வைத்தார் மூன்றாவது நபர் Colins (முதல் பெயர் மறதியில் இருக்கு) இறங்கிய இருவரையும், Eagle வாகனத்தையும் உள்வாங்கி பூமிக்கு வருவதற்காக சந்திரனைச் சுற்றிக் கொண்டே இருந்தார் அறிவை விற்று பணம் பண்ணுவோரது அக்கறை இல்லா நூல்கள் இப்படி கயிறு விடுவது சகஜம்.

ரஜீவ் சந்திரசேகரா, மெலிஞ்சோலை, மாதகல்

**O** Motor வாகனங்கள் செய்ய வெல்டிங், பெயின்ரிங், உதிரி பாகங்கள் பூட்டுவது போன்ற சகல வேலைகளும் Robot யந்திரங்கள் செய்கின்றனவாம். Pilot இல்லாமல் விமானம் ஓடுமாம். அப்ப, யுத்தம் செய்ய இதுகளை பாவித்தால் எங்கட பிள்ளையள் வீணாக காயப்பட, இறக்க தேவை இல்லையே? !

Best ? of the month. இந்த 8 வயது சிறுவனுக்கு ரூபா 100 /- பரிசாக அனுப்பியுள்ளோம் :

பள்ளி வயது குழந்தைகளை வலோற்காரமாக யுத்தத்தில் சேர்க்கும் : Siera Leone. Angola நாட்டு தலைவர்கள் வெட்கித் தலைகுனிய வேண்டும், உமது பிஞ்சு மனதின் உச்ச எண்ணங்கள் முன்னால்.

உமது கேள்வியை BBC, VOA, DW, RN ஆகிய Radio Stations களுக்கு பிரச்சாரத்துக்காக நாம் அனுப்பியுள்ளோம்.

செல்வி ச: அனு, விஞ்ஞான பீடம்
யாழ் பல்கலைக்கழகம் :

**O** ஆற்றல் சிந்திக்க வைக்கின்றது மனதை ஈர்க்கின்றது. ஆனால் முழுமை இல்லை. சிறு கதை, அரசியல், சமகால பிரச்சினை, கார்ட்டூன், சிரிப்பு, காதல் திருமணம் ஆகியவை உள்ளடக்கி, விளம்பரத்தை தவிருங்கள்.

இலாபம் இல்லாத ஆற்றல் ரூபா 5 /- மட்டுமே விளம்பரம் இல்லாது போனால் 10 /- ஆக மாற வேண்டி வரும்: கட்டாதம்மா... ஆற்றல் 24 பக்கமாகி, மாதம் 6000 விநியோகிக்க உதவுங்கள் தாங்

(தொடர்ச்சி 15 ம் பக்கம் பார்க்க)

## விஞ்ஞான மேதை

# அலெக்ஸாந்தர் ஃபிளெமிங்

செல்வி ஏன்ஜூல் நவ. உமா சிவதர்ஷினி

அலெக்ஸாந்தர் ஃபிளெமிங் பென்சிலினைக் கண்டுபிடித்தார். அவர் ஒரு அசாதாரண கைவினைஞராகவும், சிறந்த வேலையாளாகவும் இருந்தார். மேலும் பணிவான ஓர் அதிர்ஷ்டசாலியாகவும் இருந்தார் என வரலாறு கூறுகின்றது. அவரது முதற்கட்டமான, பென்சிலின் கண்டுப்பிடிப்பே நல்ல எதிர்காலத்திற்கு ஒரு பலமான முயற்சியாக அமைந்தது. அவரது 'தயார் செய்யப்பட்ட மனம்' (Mind Prepared), தொடர்முயற்சிகளுக்குச் சாத்தியமாயிருந்தது;

அலெக்ஸாந்தர் ஃபிளெமிங் தென்மேற்கு ஸ்கொட்லாந்திலுள்ள லொக்ஃபீல்ட் (Lochfield) பண்ணையில் (Huge) ஹக் ஃபிளெமிங்கில் 8 பிள்ளைகளில் கடைசிப் பிள்ளையாக, 6-ம் திகதி ஓகஸ்த்து மாதம், 1881ம் ஆண்டில் பிறந்தார். இவரது 7 வது வயதில் தந்தையார் காலமானார். தாயார் உற்சாகத்துடன் பண்ணையை மேற்பார்வை செய்து கொண்டு, தமது பெரிய குடும்பத்தைக் கரிசனையுடன் கவனித்தார்.

அலெக்ஸாந்தர் 10 வயது வரை Loudoun Moor School இல் கல்வி கற்று. பின்னர் Darvel School ல் 12 வயது வரை கல்வி கற்றார். இவர் படிப்பில் ஒரு அதிமுதிர்ச்சியும், வேகமுமான மாணவனாயிருந்தபடியால் Kilmarnock Academy க்கு அனுப்பப்பட்டார். பின்னர் குடும்பத்தின் பொருளாதாரக் காரணங்களால் படிப்பை இடைநிறுத்தவேண்டியதாயிற்று

இவரது குடும்பத்தார் மூக்குக் கண்ணாடி விநியோகஸ்தராக சொந்தமாக முயற்சியில் ஈடுபட்டிருந்தனர்.

ஃபிளெமிங்கிற்கு 16 வயதில் கப்பற்கம்பனியில் ஒரு தொழில் கிடைத்தது. 1901 ல் தனது குடும்பத்தின் பரம்பரைச் சொத்தில் ஒரு பகுதியைப் (பங்கை) பெற்றுக் கொண்டார். இது அவருக்கு ஒரு நல்ல எதிர்காலமாக அமைந்தது. திரும்பவும் பாடசாலை சென்று மருத்துவக் கல்வியைத் தொடருவதற்கு அனுகூலமாய் அமைந்தது.

லட்சக் கணக்காக முதலாம் உலக யுத்தத்தில் (1914 - 1918) காலாட்படையினர், காயமுற்றோர் மாண்டனர், தமது அங்கங்களை இழந்தனர்.

ஆனால் இரண்டாம் உலக யுத்தத்தில் (1939 - 1945) அலெக்ஸாந்தர் பிளெமிங் கண்டு பிடித்த பென்சிலின் பலரது உயிர்களைக் காப்பாற்றியது.

மேலும் அவர் இலண்டன் ஸ்கொட்லாந்தியத் தொண்டர் படையில் இணைந்து. நீச்சல், நீர்விளையாட்டு Polo (நீரில் குதிரைச்சவாரி செய்து கொண்டு அடிப்பால் தள்ளுதல்) விளையாட்டிலும் உறுப்பினராகி, புனித மரியாள் மருத்துவக் கல்லூரிப் போட்டியில் பங்கு பற்றினார். (physiology) உடற்கூறியல், (Pharmacology) மருந்தியல், (Pathology) நோயியல் போன்ற வற்றில முன்னணி வகித்தார்.

1906 ல அவரது 25 வயதில், அலெக்ஸாந்தர் (Almroth Wright) அல்மறாத் றைறருடன் இணைந்து மருத்துவ ஆராச்சியில் ஈடுபட்டார். றைற் பக்ரீரியவியலில் ஆசிரியராயிருந்தார். இரத்தத்தின் ஒரு பகுதியான வெண்குருதித் சிறுதுணிக்கையின் ஆய்வில் ஈடுபட்டிருந்தார்.

பாக்டீரியாக்களைக் கண்டுபிடித்தார் பக்ரீறியா எமது உடலினுள், சுவாசிக்கையில் காற்றுடன் உள்ளுறும் போது / குடிக்கும் போது உணவு நீருடன், தோலின் வெடிப்பு / வெட்டுக்களூடு உட்செல்ல முடியும் என விஞ்ஞானி

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)

### வெற்றியின் இரகசியம்

அன்பு காட்டு ஆனால் அடிமையாகி விடாதே!
இரக்கங்காட்டு. ஆனால் ஏமாந்து போகாதே!
பணிவாய் இரு. ஆனால் கோழையாய் இராதே!
கண்டிப்பாய் இரு ஆனால் கோபப்படாதே!
சிக்கனமாய் இரு. ஆனால் கஞ்சனாய் இராதே!
வீரனாய் இரு. ஆனால் போக்கிரியாய் இராதே!
சுறுசுறுப்பாய் இரு ஆனால் பதட்டப்படாதே!
தர்மம் செய் ஆனால் ஆண்டியாகி விடாதே!
பொருளைத் தேடு ஆனால் பேராசைப்படாதே!
உழைப்பை நம்பு ஆனால் கடவுளை மறந்து விடாதே!

செல்வி மு. மாதுரி
158, சட்டநாதர் வீதி, நல்லூர்

*5 வது இதழில் வெளிவந்த கட்டுரையின் தொடர்ச்சி*

# நேர்முகப் பரீட்சைகளில் . .

தி- தி

## விழிப்பான தோற்றமும் மனப்பாங்கும்

கவர்ச்சிகரமான தோற்றம் விழிப்புணர்வு உள்ளவரென எடுத்துக்காட்டும். சொல்வன்மையுடையவன் கூட கவர்ச்சிகரமான தோற்றமும் எந்நேரமும் தயாரான நிலையிலிருத்தலும் இல்லாவிடில், நேர்முகப் பரீட்சையில் சித்தியெய்தத்தவறலாம். அழகும் கவர்ச்சியுடைய வாலிபனாயினும் மந்த புத்தியுள்ளவனானால் வெற்றிகிட்டாது. வேகமான விளக்கமுள்ளவன் விவேகமுள்ளவன் என்றே கருதப்படுவான்,

நேர்முகப் பரீட்சைக்கு வெகுகாலத்துக்கு முன்னரே இதற்காய பயிற்சியில் ஈடுபடவேண்டும். ஒருவர் பாடசாலை, செல்லும்போதே இதனைப் பழகிக்கொள்ள வேண்டும். இதற்காகவே தான் பாடசாலைகளில், பேச்சுப் போட்டிகள், கலையரங்குகள் முதலியவை நடாத்தப்படுகின்றன; அலுவலகங்களிலும் ஆற்றல் வளர்க்கும் அமைப்புக்கள் பட்டிமன்றங்கள் இலக்கிய விவாதங்கள் முதலியன நடத்தப்படல் வேண்டும்.

ஆக்கத்திறனை வளர்க்கும் மார்க்கங்கள் பின்பற்றப்படல் வேண்டும். எந்தச் சூழ்நிலைக்கும் தம்மைத் தயார் பண்ணக் கூடியவர்கள் விழிப்பாகவே இருப்பார்கள். குறைந்த நேரத்தில் சூழநிலைக்கேற்ப தன் விழிப்புணர்வை வளர்ப்பவன் தான் நேர்முகப் பரீட்சையில் வெற்றி பெறுபவன். ஒருவன் தன் ஆளுமையை வளர்த்துக் கொண்டானாயின் அவனை இலேசில் யாரும் வென்றுவிட முடியாது.

ஒருவனுடைய ஆளுமையை வளர்க்க அவனது வாழ்க்கை நோக்குகள் மன உறுதிகள் கவரத்தக்க அம்சங்கள் யாவும் உதவுகின்றன. எனவே விழிப்பான தோற்றம் ஆளுமையின் ஒரு வெளிப்பாடாகும்.

ஆளுமையுள்ள ஒருவன் அகன்ற மனப்பான்மை, விரிந்த உள்ளம், பரந்த நோக்கு, இவையெல்லாம் கொண்டவன் ஒருவன் தானே தானாக ஆகும்போது தான் அவனது ஆளுமை புறப்படுகிறது. எனவே தான் ஆங்கிலத்தில் Personality is what you are and Reputation is what people think you are. என்ற மொழி வழங்குகிறது.

உண்மையாகவுள்ள உறுதியோடு தன் கருத்தைத் தெரிவிப்பவனுக்கே வெற்றி சேரும். அடுத்தது. உளப்பாங்கு மிக முக்கியம். எந்த நிலையிலும் தன்னைச் சமாளிக்க உளப்பாங்கு உதவும். பாதகமான சூழ்நிலைகள் தீர்க்க முடியாத சங்கடங்கள் யாவையும் எதிர் கொண்டு அவற்றினால் சிறிதும் தாக்கப்படாமல் நிலையைத் தாங்கிக் கொள்ளும் சக்தியுள்ளவன் தான் ஈற்றில் வெற்றிமாலை சூடுபவன்.

இவ்விதமான தாக்கங்களை எதிர்நோக்கும் சக்தி படைக்கவே சாரண, சாரணிய இயக்கங்கள் இயங்கி வருகின்றன.

வாழ்க்கையின் ஏற்றத்தாழ்வுகள் இவற்றுக்கெல்லாம் ஈடுகொடுக்கும் சக்தி படைத்தல். இவை மூலமாக ஒருவன் தன்னம்பிக்கையை பெறுகிறான். இந்தத் தன்னம்பிக்கை தான் ஓர் நேர்முகப் பரீட்சையில் ஒருவனைக் கட்டிக்காக்கும், கர்ணனின் உயிர் போகாமல் தடுத்ததாம் அவனது தர்மம்'

நேர்முகப் பரீட்சை அறையுள் செல்லும் ஒருவன் இவ்வகைத் தன்னம்பிக்கையுடன் தான் செல்ல வேண்டும். கேள்விக்கேற்ற மறுமொழி, சுற்றி வளைக்காத நேர் கொண்ட விடை, இவை உமது தன்னம்பிக்கையைப் பிறருக்குக் காட்டும் கண்ணாடியாகும்.

தெளிவற்ற விடையிலும் பார்க்கத் 'தெரியாது மன்னிக்கவும்' என்ற விடை உங்கள் தன்னம்பிக்கையை கேள்வி கேட்பவருக்குத் தெரிவித்து விடும். கொழும்பில், ஓர் பிரசித்தமான வங்கி நேர்முகப் பரீட்சை ஒன்றில் இலண்டன் பொருளியல் பாடசாலையில் பட்டம் பெற்று இலங்கை மீண்ட தமிழ் இளைஞனிடம் 'உமது வாழ்வின் இலட்சியமெது' வெனக் கேட்டார்கள். கண்ணிமைக்கு முன்னமே அவனது பதில் சென்றது. 'நான் ஒரு கோடீஸ்வரனாகத் தான் விரும்புகிறேன்' வங்கி முதல்வர் 'ஆகா நல்லது ஆனால் வங்கிக் கொள்கையால் தான் அது முடியும்' என்று நகைச்சுவையுடன் கூறிவிட்டார்.

இளைஞன் விடவில்லை.. பின் ஒரு நாள் அந்த வங்கித் தலைவரைத் தொலைபேசியில் அழைத்துக் கேட்டானாம். தனது தகுதி போதாதா என்று வங்கித் தலைவர் அப்போது தான் விளக்கினாராம் அவ்வளவு தன்னம்பிக்கை கொண்ட ஒருவன் மாமூலான வேலை அங்கு அதிகமானதால், தனது வங்கியிலிருக்க விரும்பான்.

திறமான மனப்பாங்கு கொண்டவன் எந்த சூழ்நிலையிலும் தன்னைச் சுதாரித்துக் கொள்ளக் கூடியவன்.

வேகமாக ஓர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் பொருத்தமான மனப்பாங்கு பயிற்சியால் ஏற்பட்டிருக்கவேண்டும். ஒரு நாளும் உங்கள் குறைகளை மறைக்க முயலாதீர்கள் நேர்முகப் பரீட்சை பற்றிய நிபுணர்களின் ஆலோசனை எப்போதும் உங்கள் Cards ஐ மேசையில் போடவும். Put all your Cards on the table. இந்த வழி பரீட்சிப்பவர்கட்கு உங்களைப் பற்றிய நம்பிக்கை பிறக்கும்.

ஒருவனாவது எல்லாத் துறைகளிலும் நிபுணனாக இருக்க முடியாது. எனவே உமது அறிவைக் காட்டுவது தான் நோக்கமாயினும் தெரியாதவிடயத்தில் 'பரிச்சயம் இல்லை' என்றபதில் பலனைத் தரலாம்.

# பொது அறிவு

**(தரம் 4, 5, 6 ற்குரியவை)**

ஜி. வி. எம். சிவலிங்கம்
ஆசிரியர்
யா / மண்டைதீவு மகா வித்தியாலயம்

I பின்வரும் வசனங்கள் சரியாயின் A எனவும் பிழையாயின் B எனவும் எழுதுக

1. விநாயகப் பெருமானிடம் ஔவையார் முத்தமிழ் கேட்டுப் பெற்றார் ( )
2. யேசுநாதரிடம் சவுல என்பார் பக்தி கொண்டு மெய்யறிவு பெற்றார் ( )
3. பகலில் வானிலே நட்சத்திரங்கள் இல்லை( )
4. சந்திரன் ஒரு கோளம் ஆகும் ( )
5. எல்லா எண்களுக்கும் இரண்டிற்கு மேற்பட்ட வெவ்வேறான காரணிகள் உண்டு ( )
6. அடுத்துள்ள இரண்டு முக்கோண எண்களைக் கூட்டினால் சதுர எண் பெறப்படும் ( )
7. பிளாத்திக்கு ஒரு செயற்கையான பொருளாகும். ( )
8. பப்பாசி மரம் இருவித்திலைத் தாவரமாகும். ( )
9. 'கூழாயினும் குளித்துக் குடி' என்னும் வாக்கியத்தின் எழுவாய் கூழ் ஆகும் ( )
10. இலங்கையின் தேசிய சின்னம் வாளேந்திய சிங்கம் ஆகும் ( )

II பின்வரும் சொற்களை வைத்து கீறிட்ட இடங்களை நிரப்புக.

மணல் மண், புகையிரதம், டெலிபோன், பந்துத்துவம், பக்தி மாசுபடுத்தும், தெங்கு, மழை, சட்டி எறிதல், கிளித்தட்டு, பருத்தி.

1. உலகிலே மானம் காக்கும் தாவரமாக ———— — போற்றப்படுகின்றது.
2. அலெக்சாண்டர் கிரகாம் பெல் என்னும் விஞ்ஞானி கண்டு பிடித்த கருவி ———— ஆகும்.
3. இறைவனிடம் நாம் வைக்கின்ற அன்பே ———— ஆக உயருகின்றது.
4. தனிமனிதன் தன் வலிமையை ———— மூலம் வெளிப்படுத்துகின்றான்
5. நீரைத் தேக்கி வைக்க முடியாத தன்மை ———— கொண்டுள்ளது?
6. விஞ்ஞானி ஸ்டீவின்சன் ———— என்னும் சாதனத்தைக் கண்டு பிடித்தார்.
7. உறவினர் மேல் கொள்ளுகின்ற அன்பு ———— என்று கூறப்படுகின்றது.
8. பொருட்களை எரிப்பதுடன், கண்ட கண்ட இடங்களில் வீசுவதும் சுற்றாடலை ———— ——
9. கொழுப்புணவைப் பெறுவதற்கு ———— உதவுகிறது.
10. விளையாட்டு வீரர்களை விட நடுவர்கள் கூடுதலாக ஈடுபடும் விளையாட்டு ————

III பின்வரும் வினாக்களுக்கு விடை தரவும்.

1. சந்திரனில் மனிதன் முதன் முதலாக இறங்கிய திகதி எது?
2. சந்திரன் ஒரு முறை பூமியைச் சுற்ற எடுக்கும் காலம் எவ்வளவு?
3. பூமியில் மிக உயரமான பிரதேசம் எது?
4. இலங்கையில் உருக்குத் தொழிற்சாலை அமைந்துள்ள இடம் எது?
5. ஒல்லாந்தர் இலங்கையை எப்போது தம் வசமாக்கினர்?
6. உலகின் முதலாவது பெண் தாதி என்று போற்றப்படுபவர் யார்?
7. மாமாவிற்கு இரண்டு கால்கள் மாமிக்கு ஒரு கால் இது எப்படிப் பொருந்தும்?
8. அண்ணன் தம்பியிலும் ஐந்து வயதில் மூத்தவன் தம்பிக்கு 2000 ஆண்டில் பதினேழு வயது என்றால், அண்ணன் எத்தனையாம் ஆண்டு பிறந்தவர்?
9. இளமையில் பச்சை முதுமையில் பஞ்சன், யார் அவர்?
10. பச்சைப்பிள்ளை, பருவம் நெருங்க சிவந்தப் பிள்ளை, மிச்ச வயதில் கறுத்தப்பிள்ளை, மிட்டாய் போல இனிக்கும் பிள்ளை யார் அவர்?
11. காலும் இல்லை, வாலும் இல்லை, கைகள் கொண்டு காட்டும் பிள்ளை, நாளும் கோளும் பார்க்க இந்த நாளில் உதவும் நல்ல பிள்ளை. அது என்ன?
12. புரதச்சத்து அடங்கியுள்ள உணவுகளை ஆங்கில சொற்களில் எழுதுக உ + Fish
13. ட்த்துட பூக்களை ஆங்கிலச் சொற்களில் கூறுக எழுதுக

பின்வரும் பழமொழியைப் பூர்த்தியாக்கவும்

14. இளமையில் சோம்பல் முதுமையில் ————

(விடைகள் 12 - ம் பக்கம் பார்க்க)

நூலகம்

# பிரச்சினை தீர்க்கும் ஆற்றல்

பொன் சந்திரகுலசிங்கம் (B A Hons)
ஆசிரியர்
யா / வரணி மகாவித்தியாலயம் வரணி

பொதுச் சாதாரண பரீட்சையின் இரண்டாவது சட்டமைப்பாக பிரச்சினை தீர்க்கும் ஆற்றல் காணப்படுகின்றது. இப்பகுதியினுள் 15 வினாக்கள் இடம் பெறும். பிரச்சினை தீர்த்தலுக்கு பின்வரும் மூன்று விசேட வகை உள்நோக்கறிவுகள் தேவைப் படுகின்றன.

* பிரச்சினையைத் தீர்க்கப் பயன்படுத்த வேண்டிய தகவற் கூறுகளைக் காணல்.
* பிரச்சினையைத் தீர்ப்பதில் உதவும் இயல் பொத்த நிலைமைகளைக் காணல்;
* தரவுகளின் குறித்த கூறுகளை குறித்த விதங்களில் சேர்த்து நிலைமையை மீளவமைத்தல்.

இவற்றை அடிப்படையாகக் கொண்ட மாதிரி வினாக்களை உதாரணமாக பின்வருமாறு நோக்கலாம்.

1. மணிமேகலை, சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, குண்டலகேசி ஆகியவற்றுக்கு ஓர் பொதுவான இயல்பு உண்டு இதே போன்ற இயல்பை கொண்டது பின்வருவனவற்றுள் எது?

1) மகாபாரதம் 2) திருவாசகம்
3) பகவத்கீதை 4) வளையாபதி *
5) திருப்புகழ்

2. நக்கீரன், அகத்தியர், இளங்கோவடிகள், அபிராமிப்பட்டர் ஆகியோருக்கு ஓர் பொதுவான இயல்பு உண்டு. பின்வருபவர்களுள் அவ் இயல்பினை உடையவர் யார்

1) கண்ணதாசன் 2) வைரமுத்து
3) திருவள்ளுவர் * 4) இளையராஜா
5) வாலி

3. பட்மின்ரன், ரேபிள் ரெனிஸ், சதுரங்கம், கரம் என்னும் விளையாட்டுக்களுக்கு பொதுவான ஓர் இயல்பு உண்டு பின்வரும் விளையாட்டுக்களில் அவ்வியல்பைக் கொண்டது எது

1) கிரிக்கெற் 2) ஹொக்கி
3) கைப்பந்தாட்டம் 4) குத்துச்சண்டை *
5) வலைப்பந்தாட்டம்

4. கப்பல், றோலர் (Trawler) இயந்திரப்படகு பாய்த்தோணி என்பன ஒத்த ஓர் இயல்பைக் கொண்டுள்ளன. பின்வருவனவற்றுள் அவ் இயல்பை உடையது எது.

1) ஹெலிக்கொப்டர் 2) மீன்கூட்டம்
3) கடல் அலை 4) கட்டுமரம் *
5) பரசூட்

5. கலைக் களஞ்சியம், அகராதி, தேசப்பட நூல், நாட்காட்டி என்பவற்றுக்கு பொதுவான ஓர் இயல்பு உண்டு பின்வருவனவற்றுள் அவ் இயல்பைக் கொண்டது எது.

1) தொலைபேசி விபரக்கொத்து *
2) சஞ்சிகை 3) சித்திரக்கைநூல்
4) சிறுகதைத்தொகுப்பு
5) புதினப்பத்திரிகை

6. பின்வருவனவற்றுள் வேறுபட்ட தன்மை கொண்ட விலங்கு எது?

1) மான் 2) மரை
3) புலி * 4) மாடு
5) முயல்

7. பின்வரும் தொழிலாளிகளிடையே வேறுபாடாக அமைந்த தொழில் யாது?

1) வைத்தியர் 2) வக்கீல்
3) ஆசிரியர் 4) மருத்துவமாது
5) கொத்தனார் *

8. கீழ் வருவனவற்றுள் வேறுபாடாய் அமையும் இடம் எது?

1) ஜேர்மனி 2) யப்பான்
3) பிரான்ஸ் 4) கொழும்பு *
5) பிரித்தானியா

தொடர்ச்சி D பக்கம் பார்க்க

**செல்வி கிருஷ்ணரங்கா சிவனேயன்**

மானிப்பாய் மகளிர் கல்லூரியில்
ஆண்டு 12 ல் கல்வி பயில்கின்றார்

இவர் எழுதிய
'வாசுகியின் வரமும்,
வாலி வதமும்'

என்னும் நாடகம் நான்கு பரிசில்களை பெற்றுள்ளது.

கல்வி இலாகா வினது கோட்டம், வலயம், மாகாணம் என்னும் மூன்று மட்டங்களிலும் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது. தேசிய நிலையில் மூன்றாம் இடத்தைப் பெற்று பெருமை தேடிக்கொண்டது

செல்வி கிருஷ்ணரங்காவிற்கு எமது நல் வாசிகளையும் கூறிக் கொண்டு, அவர் மேன்மேலும் எழுதி எமக்கு பெருமை தேடித்தருவார் என வாழ்த்துகின்றோம்.

ஆ . . . ர்

# WHAT IS A COMPUTER

Maxmy S. Aravinth
Coubvoir, France

எமது இளைய சமுதாயத்தின் மத்தியில் பரவலாக மூன்று கேள்விகள் உருவாகியுள்ளன:

1. What is Computer?
2: What is Internet?
3: What is e-mail?

ஆற்றல் பத்திரிகைக்கென பிரத்தியேகமாகத் தருவிக்கப்பட்ட கட்டுரைகளை தொடர்ச்சியாக தருகின்றோம்.

ஆக்கியோன்: திருச்சி பாரதிதாசன் கலாசாலையில் MBA முடித்துக் கொண்டு. இப்போது Paris - ல் Microsoft ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளார்.

*Computer literacy is very important in today's workplace - in fact it's an essential tool that everyone should acquire. This means learning basic computer skills such as desktop publishing (word processing and other publishing software), as well as spreadsheet software, electronic mail and Internet skills.*

**What is a Computer?**

*Computers are not very intelligent devices, but they handle instructions flawlessly and fast: They must follow explicit directions from both the user and computer programmer. Computers are really nothing more than a very powerful calculator with some great accessories. Applications like word processing and games are just a very complex math problem.*

**Software and Hardware**

*If you use a player piano as an analogy, the piano can be thought of as the hardware and the roll of music as the software.*

*The software a series of very simple computer instructions carefully organized to complete complex tasks. These instructions are written in programming languages (like BASIC, PASCAL, C —) to help simplify the development of applications.*

*The hardware is what sits on your desk and executes the software instructions. The player piano is useless unless the roll of music has been written correctly.*

*A computer is a tool that process information given to it by a user and redistributes that information in different forms depending on what the user wants. There are five different components to ANY computer. These will be the same no matter what computer you look at. Once you know these five things, you know everything really important about how computers work! These components are:*

**1 - Memory :**

*A computer,s memory is analogous to a human's short - term memory. It is used to store things needed immediately or things currently in use: Memory is measured in bytes: kilobytes and megabytes. There are 1024 bytes in a kilobyte: and 1024 kilobytes in a megabyte.*

*Most computers these days have at least several megabytes of memory. There are two different types of computer memory. These are Ram and Rom:*

**Bits and Bytes:**

*Basically, a byte is 8 bits, a bit is the smallest unit of information that a computer uses. Bits are either a 1 or a 0 Different combinations of bits make up different characters, and 8 bits makes a byte.*

*'Because of the way they work, computers have a working vocabulary of only two digits: It's easy to make an electronic device store a one or a zero, much harder to make one that can store 0 through nine We can easily build a sensor that can detect whether a light bulb is on or off. Far more complex is a sensor that can consitently detect 10 discrete levels of brightness.*

**Ram and Rom** *(types of Memory) :*

*There are two basic types of memory :*

*ROM stands for Read Only Memory, which is memory that cannot be erased. ROM stores important things that are used over again and never changed, like the startup sequence of the computer, or what a window looks like. In a human, this would store things like what your name is how to tie your shoes, etc.*

(Please see page 12)

## Computer

(From page 11)

*RAM stands for Random Access Memory, which stores things in use like applications, or operating systems. In a human, this would be like remembering where you left your shoes last, or remembering the ingredients off a recipe when you go to the cupboard to take them out.*

**2 - Input Devices :**

*Input devices and the same as a human's information - gathering senses; site, hearing, touch, and smell are all examples of human input devices. The keyboard and the mouse are two of the most common computer input devices.*

(To be continue on September Issue)

## பொது அறிவு விடைகள்

(1) A (2) A

(3) B காரணம் பகலில் வானிலே நட்சத்திரங்கள் உண்டு. சூரிய ஒளி காரணமாகக் கண்ணுக்குத் தெரிவதில்லை.

(4) B சந்திரன் ஒரு உபகோள்

(5) B சில எண்களுக்கு இரண்டிக்குக் குறைந்த காரணிகள் உண்டு

(6) A (7) A (8) A

(9) B எழுவாய், நீ (தோன்றா எழுவாய்)

(10) A

II (1) பருத்தி (2) டெலிபோன் (3) பக்தி (4) ஈட்டி எறிதல் (5) மணல் மண் (6) புகையிரதம் (7) பந்துத்துவம் (8) மாசுபடுத்தும் (9) தெங்கு (10) கிளித்தட்டு தாச்சி

III (1) 1969 யூலை 21 (இறங்கியோரது திகதி 20) (2) 27 1/3 நாட்கள் (3) எவரெஸ்ட் மலைப்பிரதேசம் (3) ஓறுவல (மேல) (5) கி. பி. 1658 - ம் ஆண்டு (6) புளோரன்ஸ் நைற்றிங்கேல் அம்மையார். (7) மாமா எனனும் சொல்லில் இரண்டு அரவுகள் உண்டு. மாமியில் ஒன்று மட்டும்

(8) 1978 - ம் ஆண்டு (9) தாவர இலைகள் (10) ஈச்சம் பழம் (11) சுவா மணிக்கூடு

(12) Egg - முட்டை, Meat - இறைச்சி, Milk - பால், Soya beans - சோயா அவரை, Fish - மீன், Black gram, உழுந்து.

(13) Lotus - தாமரை, Jasmine - மல்லிகை, Sun flomev - சூரிய காந்தபூ, Christmas flower - செவ்வந்திப பூ Lily - அலிப் பூ. Camomile - சாமந்திப் பூ. Rangoon - Creeper - ரங்கூன் மல்லிகை Rose - ரோஜா, Water Soldier - நந்தியாவட்டைப் பூ Water - Lily - ஆம்பல் பூ (14) வறுமை.

## விஞ்ஞான மேதை

(7 - ம் பக்கத் தொடர்ச்சி)

கள் கண்டறிந்தனர்; 'அப்படியானால் எம்மால் ஏன் பக்ரீறியாவை முற்றாக அழிக்க முடிவதில்லை?' குருதியில் உயிர்வாழும் வெண்குருதிச் சிறுதுணிக்கைக் கலம் வீக்கமடையும் போது நுண்ணங்கி சீரணமடையும் என்று Elie Metchnikoff என்பவர் கண்டு பிடித்தார் Robert Koch என்பவர் குருதிப்பாயியானது தானாகவே பக்ரீறியாவைக் கொல்லும் சக்தி வாய்ந்தது என்று கண்டு பிடித்தார்.

இச் சர்ச்சை, றைற் (Wright) இன் ஆய்வு மூலம் தீர்க்கப்பட்டது. வெண்குருதிச் சிறுதுணிக்கைகளை (Phagocyter), நுண்ணங்கிகளை விழுங்குவதற்கு போதுமான அளவு இல்லாதிருப்பதைக் கண்டுபிடித்தார். குருதிப் பாயியால் தயாரிக்கப்படும் முன்னருள்ள நுண்ணங்களினை வெண்குருதிச் சிறுதுணிக்கைகள் விழுங்கமுடியும். இக்குருதிப்பாயி ஒப்சொனின் (Opsonin) எனறு அழைக்கப்பட்டது.

13, பெப்ரவரி, 1922 இலண்டன் றோயல் சமூகம் (Royal Society) ஒரு பத்திரிகையைப் பெற்றுக் கொண்டது. குறிப்பிடத்தக்க பக்ரீறியமாக்கப்பட்ட மூலகம் இழையங்களிலும், (உடலினுள்) உற்பத்தியிலும் கண்டெடுக்கப்பட்டது. இதில் ஃபிளெமிங்கின் கண்டுபிடிப்பான, இயற்கை மூலப்பொருள் - Lysozyme என்றழைக்கப்பட்டதன் விபரம் காணப்பட்டது.

அலெக்ஸாந்தர் தமது வளவில் ஒரு பாத்திரத்தில் நுண்ணங்கி வளர்த்தார் ஆனால் அந்நுண்ணங்கியில் பூஞ்சணம் வளையமாக சுற்றியிருந்தது. அதற்கு பக்ரீறியாவை அழிக்கும் சக்தியிருந்தது. இது நீல நிறமான பக்ரீறியாவை அழிக்கும் பூஞ்சணம் துப்பு போன்ற தோற்றமாயிருந்தது. இதற்கும் 'பென்சிலியம்' என்று பெயரிடப்பட்டது.

ஃபிளெமிங் ஒரு விஞ்ஞான ஒழுங்கு முறையான ஆய்வினை பென்சிலின பூஞ்சணம் மீது மேற்கொண்டு, 17 வருடங்களின் பின்னர் பென்சிலினின் மதிப்பைக் கண்டுபிடித்தார். இதன்பயனாக நோபல் விருதைப் பரிசாகப் பெற்றார், அவர் 1955 இல் இறக்கும் வரை பக்ரீறியவியலில் ஆய்வைத் தொடர்ந்தார்.

'ஏற்கனவே தயார் செய்யப்பட்ட மனதின் எதேச்சையான அவதானிப்பில் ஏற்பட்ட காட்சியே அன்றி, இது ஒரு விபத்து / கண்டுபிடிப்பு அல்ல' ஒரு கண்டுபிடிப்பு மற்றொரு கண்டுபிடிப்புக்கு வழி கோலும் எனறு ஃபிளெமிங் கூறியுள்ளார்.

'ஆய்வின் நோக்கு அறிவின் முன்னேற்றம் ஆகும்'

## ஆற்றல் பொது அறிவு

(17 - ம் பக்கத் தொடர்ச்சி)

(15) கோடை காலத்தில் வெப்பம் தாங்காது ஆறுகளிலும், குளங்களிலும் மக்கள் மணித்தியாலக் கணக்காக குளிப்பது வழக்கம், அளவுக்கு மிகுந்து மது அருந்தும் பழக்கத்தினால் நாடு முழுவதிலும் ஆயிரக்கணக்கானோர் நீரில் மூழ்கி இறக்கின்றனர். இவ் விபரம் BBC World Today யில் தரப்பட்டது. இந் நாட்டின் பெயர் என்ன?

### 03 / 06 போட்டி விடைகள்

(1) நரேந்திரன், (2) கலாநிதி ராஜேந்திர பிரசாத் (3) சி. ராஜகோபாலாச்சாரி, (4) கலாநிதி சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் (5) 29 பேர்கள், )6) ஏகூட் பராக், (7) சேர் கார்பீல்ட் ஸோபேர்ஸ் (8) இலங்கை, கண்டி (9) அவுஸ்திரேலியா (10) ஸிற்றிக் அசிட்

### 03 / 06 பரிசு பெற்றவர்கள்

முதலாம் பரிசு ரூபா 250 / -

செல்வி கோகுலவதனி இராஜேந்திரம்

2000 A / L (Arts)

வட்டு இந்துக் கல்லூரி, வட்டுக்கோட்டை

இரண்டாம் பரிசு ரூபா 150 / -

செல்வி செ. மேகலா, தரம் 9

யா / புற்றளை மகா வித்தியாலயம், புலோலி

மூன்றாம் பரிசு ரூபா 100 / -

செல்வி வி. கலைச்செல்வி, தரம் 8 C

யா / வடமராட்சி மத்தி மகளிர் கல்லூரி, பருத்தித்துறை

### போட்டிகளில் வெற்றியீட்டியோர் கவனத்திற்கு

பரிசுத் தொகைகள் சேமிப்பு வங்கிக் கணக்கில் வைப்புச் செய்வதாக தீர்மானித்துள்ளோம்.


ஆகையால், வெற்றியீட்டியோர் அண்மையில் உள்ள வங்கியொன்றில் ஓர் சேமிப்புக் கணக்கொன்றினை ஆரம்பித்து, அவ்விபரங்களை எமக்கு அறியத்தரவும்.

பரிசுக்குரிய தொகைகளை உரிய கணக்குகளில் வைப்புச் செய்வதற்காக நாம் ஆவன செய்வோம். ஆ . ர்

## தலைமைத்துவம்

(4 - ம் பக்கத் தொடர்ச்சி)

கருதும். இங்கு உதவியாளர்கள் அபிவிருத்தியடைந்து முதிர்ச்சியடையும் போது அதற்கேற்ப ஒவ்வொரு கட்டத்திலும் தலைமைத்துவப்பாங்கு எவ்வாறு மாறுபடுகின்றது என்பதனை Cycle என்பதன் மூலம் விளக்கியுள்ளனர். இதனைப் பின்வருமாறு காட்டலாம்.




ஆரம்பக்கட்டத்தில் அதாவது உதவியாளர் முதன்முதலாக நிறுவனத்தில் வேலைக்கு சேரும்போது முகாமையாளர் அதிகளவில் வேலையை மையமாகக் கொண்டு வழிநடத்துவதே பொருத்தமானதாக இருக்கும்: எனவே இங்கு வேலையை மையமாகக் கொண்டு வேலைகள் தொடர்பாக அறிவுறுத்துவது டன் ஊழியர்களுடன் குறைந்த உறவுகளையே கொண்டிருப்பர்.

இரண்டாவது கட்டத்தில் உதவியாளர் தமது வேலைகளைக் கற்றறியத் தொடங்கினாலும் அவர்கள் இன்னும் முழுப்பொறுப்பையும் ஏற்க சம்மதமாக இருக்கமாட்டார்கள். இதனால் முகாமையாளர் அதிகளவில் வேலையை மையமாகக் கொண்டு வழிநடத்துவார்கள். அத்துடன் இக்கட்டத்தில் உதவியாளருடன் பழக்கமானவராக ஆகுவதாலும் அவர்களை உற்சாகப்படுத்த விரும்புவதாலும், தொடர்புகளை அதிகளவில் பேணுவார்.

மூன்றாவது கட்டத்தில் உதவியாளர்களின் ஆற்றல் சாதனைக்கான விருப்பு பொறுப்புக்களை ஏற்பதற்கான சம்மதம் என்பன அதிகரித்ததால் இங்கு முகாமையாளர்களில் வழிநடத்தல் அதிகளவில் தேவைப்படாது. எனினும் உதவியாளர்களின் மன உறுதியை அதிகரிக்கக்கூடிய வகையில் அவர்களுடன் அதிக தொடர்புகளைப் பேணுவார்.

உதவியாளர் படிப்படியாக முதிர்ச்சியடைந்து நான்காவது கட்டத்தை அடையும்போது அவர்கள் சுயமாக இயங்கக்கூடியவர்களாகவும் அனுபவம் வாய்ந்தவர்களாகவும் ஆகுவதால் முகாமையாளருடன் அதிகளவில் தொடர்பு கொள்ளவேண்டிவராது. முகாமையாளரின் வழிநடாத்தலும் அதிகளவில்

(தொடர்ச்சி 19 - ம் பக்கம் பார்க்க)

# சத்துள்ள உணவுப் பயிர்கள்

கா. குணரத்தினம் (அங்யாலை)
ஆலோசகர்
ஐக்கிய நாட்டு உணவு விவசாய ஸ்தாபனம்

தற்போதய சூழ்நிலையில் எங்கள் மக்களுக்கு போஷாக்குள்ள உணவுப பொருட்களை வழங்குவது மிக முக்கியமானதாகும்.

ஆண் ஒருவருக்கு சராசரியாக 2500-3000 கலோரியும், பெண் ஒருவருக்கு சராசரியாக 2000 - 2250 கலோரியும், குழந்தை ஒன்றுக்கு சராசரியாக 1500 கலோரியும் நாளொன்றுக்கு தேவையானதாகும்.

எங்களுடைய நாளாந்த உணவில் எங்களுக்கு தேவையான சக்தியில் 5% மாப்பொருளில் இருந்தும், 10% - 20% புரதத்தில் இருந்தும், 30% - 35% கொழுப்பில் இருந்தும் பெறவேண்டியுள்ளது. அதோடு கொழுப்பு எங்களுக்கு அவசியம் அதாவது விற்றமின்கள் A, D, E, K கரைவதற்கு கொழுப்பாவது அவசியமாகும்.

மேலே குறிப்பிட்ட பிரகாரம் எங்கள் மக்களுக்கு தேவையான சத்துள்ள உணவை ஊட்டுவதற்கு எங்கள் மாவட்டத்தில் பின்வரும் பயிர்களை பயிர் செய்து போஷாக்கு சம நிலலயை இலகுவாக பெற்றுக் கொள்ளலாம்.

### மாப்பொருள் :

நெல், குரக்கன், சாமை, திணை, சோளம், வரகு, கம்பு, மரவள்ளி, உருளைக்கிழங்கு, வற்றாளை, இராசவள்ளி, சட்டிக்கறணை, பனம் ஒடியல்.

### புரதம் :

அவரை இனங்கள் : பாசிப்பயறு, உழுந்து, கௌபி, சோயா, அவரை, சிறகு அவரை, பயிற்றை, செடி அவரை, துவரை.

மரக்கறிகள் : பூக்கோவா, சுண்டங்காய், பலாக்கொட்டை.

### கொழுப்பு :

எண்ணெய்ப்பயிர்கள் : நிலக்கடலை, எள்ளு, சூரியகாந்தி, மரமுந்திரிகை விதை, தேங்காய்.

### கனிப்பொருட்கள் :

அ) இரும்புச்சத்து : பசளி, பொன்னாங்காணி, கறிமுருங்கை இலை, தவசி முருங்கை இலை, வல்லாரை, கீரை, சுண்டங்காய், எள்ளு, அகத்தி.

ஆ) கல்சியமும் பொசுபரசும் : அகத்தி, பசளி, கீரை, பொன்னாங்காணி, கறிமுருங்கையிலை, எள்ளு, கரட், பீற்றூட் இலை, குரக்கன், முருங்கைக்காய்.

### விற்றமின் A

இலைமரக்கறிகள் : கரட், மஞ்சள்நிறப் பழங்கள் (மா, பப்பாளி, லாவுலு, வாழைப்பழம்) சக்கரைப்பூசணி, கறி மிளகாய், கொத்தமல்லி இலை பீற்றூட் இலை, கறிமுருங்கையிலை.

### விற்றமின் B :

அகத்தி, பீற்றூட் இலை, கறிமிளகாய், பசளி, முளங்கி இலை, பலாக்கொட்டை, சர்க்கரைப் பூசணி இலை, லீக்ஸ், வெண்டிக்காய், இராசவள்ளி, கத்தரிக்காய்.

### விற்றமின் C :

நெல்லிக்காய், தோடை, தேசிக்காய், பப்பாளி, கொய்யா, தக்காளி, கறிமிளகாய், கங்குன் (பனங் கீரை) முருங்கை இலை, முருங்கைக்காய், அகத்தி, மஞ்சள் நிறப்பழங்கள்.

## பேனா நண்பர்

பொதுவாக நாள் இதழ்களில் காணப்படுவன போல இல்லாது, சில விதிகளைக் கொண்டதாக இருக்கும் என முன்னர் அறிவித்தோம். கவனித்திருப்பீர்கள்.

இடையில் நிறுத்தாது, தொடர்ந்து கடிதங்கள் பரிமாறப்படுவதை உறுதிப் படுத்துவதற்காக முதல் ஆறு கடிதங்களும் எமது மேறபார்வையிலே வநியோகிக்கப்படும்.

ஆங்கிலத்தில கடிதம் எழுதுவதற்கு நாம உதவுவோம.

கடிதம் எழுத பழக வேண்டும் என அறிவுறுத்தல கிடைத்தோர் மீண்டும் விண்ணைப்பிக்க வேண்டும். இதற்கு கூப்பன் இல்லை. தேவையுமல்ல.

இரு மாத காலத்தில் கடிதங்கள் எழுத ஆயத்தமாயிருங்கள். விண்ணப்பியுங்கள். இளய வாசகர்களுக்கு நாம் வழங்கும் சேவை : இனாம்

பென் அங்கிள்

# சமூகப் பொறுப்புணர்வு

இ. திலகரட்ணம்
விரிவுரையாளர்
உயர் தொழில் நுற்ப நிறுவனம் யாழ்ப்பாணம்

நாம் வாழ்க்கை முழுவதும் நிறுவனங்களுக்குள் இருக்கின்றோம். ஒருவன் உடைத்துக் கொண்டு வெளியேறும் போது சமூகம் அவனை துறவி, ஊதாரி, பயங்கரவாதி, நாடோடி, கிப்பி என பலவாறு அழைந்து ஒரு நிறுவனத்துக்குள் கொண்டு வந்து பார்க்கவே முற்படுகின்றது. எனவே இன்று எவரும் தம்மை நிறுவனத்திலிருந்து பிரித்து வேறு படுத்திக் கொள்ள முடியாது.

சிறுவராக, இளைஞராக இருக்கும்போது பாடசாலை மாணவர் மன்றம், சாரணர் கழகம், என்பன போன்ற நிறுவனங்களிலும், வளர்ந்தவரான பின் இலாப உழைப்பு நோக்கம் கொண்ட வர்த்தக நிறுவனங்கள், இலாப நோக்கம் இல்லாத சமூக சேவை நிறுவனங்கள், அரச திணைக்களங்கள் கூட்டுத்தாபனங்கள் உள்ளூராட்சி சபைகள் போன்ற நிறுவனங்களில் இடம் பெற்றிருப்போம்.

இங்கு குடும்பமும் ஒரு நிறுவனமே. அதேபோல் அரசும் ஒரு நிறுவனமே. எனவே மனிதன் ஒருவன் நிறுவனத்துக்குள் இருப்பது தவிர்க்க முடியாததும், சட்ட நிலைப்பாடாகவும் இருக்கின்றது.

எனவே நிறுவனம் ஒன்றில் பொது இலக்கு, பொது வேலைகளில் மக்கள் ஈடுபடுவர். இதற்காக அதிகாரங்கள் பல மட்டங்களில் பிரயோகிக்கப்படும், கணக்குக் கொடுத்தல் அல்லது பொறுப்பேற்றல் காணப்படும்.

நிறுவன ஒழுங்கமைப்பு பல்வேறு வடிவங்களைக் கொண்டிருக்கலாம். உண்மையில் எந்த இரண்டு நிறுவனமும் ஒரே விதமான ஒழுங்கமைப்பு வடிவத்தைக் கொண்டிருப்பதில்லை. ஆனால், நிறுவன ஒழுங்கமைப்பை அதன் வடிவத்தை விளங்கிக் கொள்ளுதல், உணர்ந்து கொள்ளுதல், உடன்படுதல் 'சமூகப் பொறுப்புணர்வு' எனப்படும். இவற்றை உணர்ந்து கொள்வதே மேலான 'சமூகப் பொறுப்புணர்ச்சி' ஆகும்.

ஜனநாயக அமைப்பில் அரசு என்ற நிறுவனம், அதன் எல்லா மட்டங்களிலுமுள்ள அதிகாரிகள், மக்களுக்கு கணக்குக் கொடுக்க வேண்டியவர்களாக, பொறுப்பேற்க வேண்டியவர்களாக உள்ளார்கள். இதே போன்று இலாப நோக்கம் கொண்ட வர்த்தக நிறுவனங்களும் சேவை நோக்கம் கொண்ட சமூக சேவை நிறுவனங்களும், அரசுக்கு அதாவது மக்களுக்கு கணக்குக் கொடுக்க வேண்டியவர்களாக, பொறுப்பேற்க வேண்டியவர்களாக உள்ளனர். ஆயினும் அத்தகைய ஒரு கருத்து விலகிக்கொண்டிருப்பது சமூகப்பொறுப்பின்மையாகவே கொள்ளத்தக்கது.

இதனால் இன்றைய சமூக அமைப்பில் ஒரு கரையில் அதிகாரிகளையும் மறு கரையில் அதிகாரத்தை ஏற்பவர்களையும் அதாவது மக்களையும் கொண்டுள்ளது. இந்த மாயை காரணமாக அதிகாரிகள் தம்மை மக்களிலிருந்து வேறுபடுத்தி வெறும் அதிகாரிகளாக இலாபம் உழைப்பவர்களாக செயற்படுவது சமூகப் பொறுப்புணர்வின்மையே. குடியேற்றவாதப் பின்னனியில் 'அதிகாரிகள்' என்ற கருத்துக் கொண்டு செயற்பட முற்படுவதும் சமூகப் பொறுப்புணர்வின்மையே இது ஒரு பரம்பரை நோய் போல பீடித்துள்ளதால் 'சமூகப் பொறுப்புணர்வு' என்பது மரத்துப் போனது போல தென்படுகின்றது.

எவரும் எதற்கும் கணக்குக் கொடுக்கவோ, பொறுப்பேற்கவோ முன்வராமையுடன் தனது அதிகாரத்தை மட்டும் செலுத்திக் கொண்டிருக்க முன்படுகின்றனர். தவிர அதிகாரத்திற்கு உட்பட்ட வளங்களை விரயமாக்குவது, சுவீகரிப்பது, சுரண்டுவது, தவறாக பயன்படுத்துவது எல்லாமே ஒரு துற்குறியே.

சமூகப் பொறுப்புணர்வின்மையே பக்கபலமாக் நாட்டுப்பிரச்சினை, போக்குவரத்து பிரச்சினை, என பிரச்சினைகளுக்குள் ஒழிந்து கொள்வதும் சமூகப் பொறுப்புணர்வின்மையே இங்கு சமூகப் பொறுப்புணர்வு வெளியிலிருந்து கொண்டுவரப்படுவதல்ல, எமக்குள் நாமே ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய மனித நேயம் ஒரு உணர்வோமா?

---

## ஏன் ? எப்படி ? ?

(6 - ம் பக்கத் தொடர்ச்சி)

கள் கேட்ட சகலதையும், அரசியலைத் தவிர, தந்து முழுமையாக்குவோம், எழுதுங்கள்.

செல்வி இளமதி, சாவகச்சேரி

**O ஆற்றலை காற்று அள்ளிச் செல்வது என் மனதை நோகடிக்கிறது.**

ஆவன செய்துள்ளோம் இப்போ காற்று தடவிச் செல்லும்.

R: கணேசன், கோகிலாக்கண்டி, நாவற்குழி

**O பல கடிதங்களுக்கு பதில் இல்லை. நீயும் ஒரு ஆசிரியர், உனக்கு நாலு வாலுகள். உனக்கு ஏன் இந்த வேலை?**

பிடிக்காத விஷயத்தை தவிர்ப்பது தான் புத்திசாலித்தனம், '... வெட்டென மற', என்பதை சிறு வயதில் படிக்கவில்லையா?

S: மஞ்சுளா, இடைக்காடு, அச்சுவேலி

**O அறிவு வளர்வது எப்படி?**

பலரது சிந்தனைகளை புத்தகங்கள் படிப்பதால் கிரகிக்கலாம். 'கண்டு அறிந்து கற்றவன் பண்டிதன் ஆவான்', என்கிறார் எனது பெரியவர். அப்போ, தேடித் தரமானதை வாசியும்.

# ACTION FAIM
# பட்டினி எதிர்ப்பு

(சர்வதேச அமைப்பு, யாழ் நிறுவனம்)

பயிற்சி தொகுப்பு :
**சுப்பிரமணியம் கோமதி**
வில்வளை, மாதகல்

## தக்காளிப் பழ (ஸோஸ்)

### தேவையானவை :

01 kg தக்காளிப்பழம் ½ kg சீனி; 30g செத்தல் மிளகாய்; 10g உப்பு; 20g பூடு; 20g இஞ்சி; 100g புளி; 01 துண்டு கறுவா; 01½ கப் வினாகிரி

### செய்முறை :

1. தக்காளிப் பழத்தை கொதி நீரில் போட்டு, தோலை நீக்கி, சிறு துண்டுகளாக வெட்டி, மசித்து, அரி தட்டில வடித்து எடுக்கவும்.
2. செத்தல் மிளகாய், கறுவா, உள்ளி (பூடு), இஞ்சி ஆகியவற்றை வினாகிரியில் அரைத்து எடுக்கவும்.
3. புளியை வினாகிரியில் கரைக்கவும்.
4. சீனி, புளிந்த சாறு (1-வது), அரைத்த கூட்டு (2-வது), கரைத்த புளி (3-வது, உப்பு தூள் ஆகியவற்றை நன்றாக அடுப்பில் காச்சவும்.
5. சட்டியில ஒட்டாத பதம வந்ததும் இறக்கி, ஆறவிடவும்.
6. போத்தலில் இட்டு அடைத்தால் Sauce is ready for the table.

## டுபாய் பூசணிக்காய் இனிப்பு

### தேவையானவை :

½k பூசணிககாய், ½kg சீனி, 50g கசுக்கொட்டை (Cadju Nuts) அல்லது கச்சான், வனிலா அளவாக, 1 கப் நீர்.

### செய்முறை .

1. பூசணிக்காயை துப்பரவு செய்து! துருவலை (ஸ்கிம்றப்பா) துருவ; வலைத் துணியில் துருவிய பூவை புளிந்து எடுக்கவும.
2. சீனியை பாகு காய்ச்சி; நூல் விடும் பதம் வந்ததும, துருவிய பூவை போட்டு, கலக்கி, இறுகி வரும்போது; வனிலா, சஜூ / கச்சான போட்டு கிளறி, நெய பூசிய தட்டில கொட்டி; துண்டங்களாக வெட்டி விடவும்.

## இசைப்பீடங்கள்

(5 - ம் பக்கத் தொடர்ச்சி)

தென் இந்திய இசை மேதைகளின் சாரமே இங்கு வாழ்ந்ததென்று கூறலாம். கர்நாடக இசை ஆக்கங்களின ஐந்தில் நான்கு பகுதி இங்கேயே உருவாககப்பட்டது எனலாம்.

கர்நாடக இசைக்கு புகழ் பெற்றுத் தந்த இசைக் கருத்தாக்கங்களும், இசையின் நளமையான தன்மை களை ஆராய்ந்த இசை வல்லுனரும், வாய்ப்பாட்டு வாத்திய இசை ஆகியவற்றிற் கைதேர்ந்த வல்லுன ரும் இங்கு நிறைந்திருந்தனர்.

தஞ்சாவூரில் பரத நாட்டியத்தின் உயர்ந்த பாரம்பரியமும், பாகவத மேள நாடகக் கலையும் மிக கவனமாக பேணப்பட்டு விருத்தி செய்யப் பட்டன. கதா காலேட்சேபம் செய்யும் கலையும் இங்கு பேணி வளர்க்கப்பட்டது. தெய்வீக நன்மை பொருந்திய இசைப் பாடல்கள் இங்கு பெருமளவில் இயற்றப்பட்டன. பஜனை வளர்க்கப்பட்டது. சரித் திர புகழ் பெற்ற 72 மேள கர்த்தாக்களில் ஒழுங்கு முறை வகுக்கப்பட்டது.

24 விரல் மெட்டுகள் பொருத்தப்பட்ட நவீன வீணையும் இங்கேயே உருவாக்கப்பட்டது. இதனாலேயே இவ் வீணை தஞ்சாவூர் வீணை என அழைக்கப்பட்டது. செப்பு, மரக்காற்று வாத்தியங் களை வாசிப்போர் அடங்கிய தஞ்சாவூர் இசைக் குழு சரபோஜி காலத்தில் விருத்தி அடைந்தது.

சரபோஜியின் ஆஸ்தான மண்டபத்தை ஏறக் குறைய 360 சங்கித வித்துவான்கள் அலங்கரித் தனர். இவர்கள் ஒவ்வொருவரும் வருடத்தில் ஒரே ஒரு நாள் மாத்திரம் அரசன் முன்னிலையில் பாடும் பேறு பெற்று இருந்தனர்; இத்தினத்தில் மிகத் திறமையாக அரச சபையில் நிகழ்ச்சியை நடாத்து வதற்காக அவர்கள் வருடம் முழுவதும் ஆயத்தங்கள் செய்த வண்ணமே இருந்தனர்.

தியாகராஜரின் குருவாகிய சொந்தி வெங்கட ரமணயா என்பவரின் தந்தையாராகிய சொந்தி வெங்கட சுப்பையா என்பவர் மாத்திரமே புதுவருட தினத்தன்று அரசவையிற் பாடும் அபூர்வ பேற் றினை பெற்றிருந்தார்.

இசைக் கருவிகள செய்யப்படுவதற்கும், பிற நாட்டு வாத்தியங்களை கர்நாடக இசைக்கு ஏற்ப உபயோகிப்பதற்கும் பிரசித்தி வாய்ந்த இடமாக தஞ்சாவூர் விளங்கியது.

பாலுசாமி தீட்சதர் என்பவரே முதன் முதலாக வயலின் வாத்தியத்தில் கர்நாடக இசையை வாசித் தவர்.

கிளாரினெட் வாத்தியத்தை கர்நாடக இசைக்கு அறிமுகப்படுத்தியவர் மகாதேவ நட்டுவனார்.

பல முக்கிய இசைக் கருத்தரங்குகளும் தஞ்சா வூரிலேயே நடை பெற்றன.

(அடுத்த இதழில் தொடரும்)

# ஆற்றல் பொது அறிவு

**வினா விடை 05 / 08**

01. முற்றும் சரியான விடைகளுக்கு பரிசில்கள் ரூபா 250 / 150 / 100 / -

02. முடிவு 20 - 09 - 1999

03. விலாசம் : **ஆற்றல், 76 கண்டி வீதி, யாழ்ப்பாணம்.**

04. கடித உறையினது இடது மேல் மூலையில் 'வினா விடை' என குறிப்பிடவும்.

05. எமது செயற் குழு பரிசிற்குரியோரை தெரிவர். அவர்களின் முடிவே இறுதியானது

## 05 / 08 வினாக்கள்

(1) கண் பார்வை இல்லாதோர் கல்வி கற்பதற்கான முறையினை கண்டு பிடித்தவர் யார் ?

(2) சர்வதேச உலக சிறுவர் தினம் எந்நாளில் கொண்டாடுகின்றோம் ?

(3) அண்மையில் உலகை ஈர்த்த கணனி வைரஸ் (Virus)ன் பெயர் என்ன ?

(4) ஆகாய விமானத்தைக் கண்டு பிடித்தவர் / கள் யார் ?

(5) உலகில் மிக உயரமான மரம் யாது ? எங்குள்ளது ? அதன் உயரம் என்ன ?

(6) சோதனைக் குழாய் மூலம் பிறந்த முதற் குழந்தை எப்போது ? எங்கே ? பிறந்தது? அதன் பெயர் என்ன ?

(7) 1990 - ம் ஆண்டு விம்பிள்டன் ரெனிஸ் போட்டியில் இரட்டையர் ஆண்கள் பிரிவிற்கான கோப்பையை வென்றவர்கள் யார்? எந் நாட்டவர்கள்?

(8) இன்ரநெற் தகவல் தொடர்பு முறையில் ஆங்கிலத்தில் 'W W W' என சுருக்கமாக குறிப்பிடுவது, எதைக் குறிக்கும்?

(9) உதைபந்தாட்ட போட்டிகளில் மிகப் பழமை வாய்ந்தது Cupa America என்னும் போட்டியே. இதில் தென் அமெரிக்க நாடுகள் மட்டும் பங்கு கொள்கின்றன. இந்த வருடம் சென்ற மாதம் நடந்த போட்டிகளில், எந்த நாடு சம்பியனாக வெற்றியீட்டியது?

(10) முதன் முதல் சர்வதேச Cricket Match எந்த ஆண்டில் எந் நாடுகளுக்கிடையில் நடை பெற்றது?

11) வளர்ந்த நாடுகள் கூடும் கூட்டத்தை G 7 என வர்ணிப்பர். இந்த Group 7ல் USA. UK, Framce, Italy, Germany, Japan, Canada அடங்கும். இவைகளுடன் Russia வும் இணைந்தால் அவற்றை G 8 எனக் கூறுவர். இது போன்று K 4 என்பது என்ன?

(12) உலக சர்வதேச பெண்கள் உதை பந்தாட்ட 1999 -ம் ஆண்டு இறுதிப் போட்டியில் பங்கு பெற்ற இரு அணிகள் எவை? வெற்றியீட்டிய அணி எது?

(13) MIR என்னும் Russia நாட்டு விண்கலன் இன்றும் உலகத்தை வலம் வருகின்றது. இவ்வாறு, எத்தனை ஆண்டுகள் வலம் வருகின்றது? அக்கலனில் சமகாலத்தில் இருக்கும் நபர்களது எண்ணிக்கை என்ன?

(14) Football Association Cup (FA CUP) Premier Cup என்பன பிரித்தானிய நாட்டில் நடக்கும் உதைபந்தாட்ட போட்டிகள். European Cup Winners Cup என்பது ஐரோப்பிய நாடுகளுக்குள் சம்பியனாக வெற்றியீட்டிய Clubs களுக்குள் நடக்கும் பிரபல்யமான போட்டி. இம் மூன்று கோப்பைகளையும் இந்த வருடம் ஒரு [illegible] வென்றது. அதன் பெயர் என்ன ? எந்த நாட்டைச் சேர்ந்தது ?

(தொடர்ச்சி 13 - ம் பக்கம் பார்க்க)

**கூப்பன் : 05 / 08**

பெயர் : ____________________

விலாசம் : ____________________

____________________

மாணவராயின் பாடசாலை :

வகுப்பு : ____________________

திகதி ____________ ____________ ஒப்பம்

# மக்கள் வங்கி

**உங்கள் வாழ்நாள் முழுவதும் நிழல்போல்**
**உங்களைத் தொடர்ந்து வரும் 'மக்கள் வங்கி'**
**மக்கள் சேவையில் 36 ஆண்டுகளைத் தாண்டிவிட்டது !!**

★ 60 இலட்சம் வாடிக்கையாளர்கள் !!
★ 400 க்கும் மேற்பட்ட கிளைகள் !!

இந்த உன்னத நம்பிக்கைப் பிணைப்பில் நீங்களும் சேருங்கள் !!!

**வங்கியின் வழமையான சேவைகளுடன்**

★ பாடசாலை மாணவர்களுக்கான விசேட சேமிப்புத்திட்டம்
'மாணவர் மலர்ச்சி'
★ மகளிருக்கான திட்டம்
'மகளிர் அதிர்ஷ்டக் கணக்கு'
★ ஆசிரியர்களுக்கான விசேட வைப்பு மற்றும் கடன் திட்டம
'குருசேத'
★ சுகாதார சேவையிலுள்ள தாதியருக்கான விசேட வைப்பு மற்றும் கடன் திட்டம்
'சுவசெவன'
★ தொழில் அற்றோர் சுயதொழில் தொடங்குவதற்கு திட்டம்
'சுயதொழில் ஊக்குவிப்புக் கடன்'
★ முதியோருக்கான திட்டம்
'முதிய பிரஜைகள் யாத்திரைக் கணக்கு'
★ வருடந்தோறும் சேமிப்புக் கணக்குகளுக்கு அதிர்ஷ்டலாபப் பரிசு வழங்கும் திட்டம்

இன்னும் பலப்பல திட்டங்கள் !! அனைத்தும் உங்கள் வளர்ச்சிக்கே !!
இலட்சோப இலட்சம் மக்களின் வங்கியாகிய மக்கள் வங்கியின்
வாடிக்கையாளராகி நலம் பல பெறுவீர் !!!

**மக்கள் மனமறிந்த வங்கி**

## 'மக்கள் வங்கி'

**பிரதேச தலைமை அலுவலகம்**
**யாழ்ப்பாணம்**

# ENGLISH LITERATURE

## — An Introduction

Dr. V. Sivarajasingham
Department of Linguistics
University of Jaffna

**Why study Literature ?**

*Man is the crown of all creations. Animals cannot talk or laugh ! Only MAN is gifted with the faculty of speech and laughter. Besides he has the capacity to distinguish between good and bad actions. However, sometimes he behaves brutally. There are occasions when the animal instinct in him takes the upper hand. Then he becomes inhuman.*

*Sages and wise men have been able to suppress the animality in them by means of training their minds, always engaging themselves in good thoughts. Their distilled thoughts of wisdom are collected in the form of books.*

*These books serve as guides for us to shape and formulate our thoughts in a noble way. It was poet Milton who said, 'A good book is the precious life-blood of a master-spirit'.*

*Good books containing high ideas and ideals are our real life companions. They not only direct us in the proper ways of life but also provide to our minds as well. It is the arts generally and literature in particular that uphold noble ideas and ideals. They are the treasure houses of human values.*

*When one looks at the work of a great artist or a great writer one gets the overpowering impression that it is the reflection of life. The paintings of Leonardo da Vinci for example are full of vitality. Similarly in literature we find the writings of Charles Dickens everywhere throbbing with life. The writings of Dickens form a miniature world where we come across all sorts of people and all kinds of happenings related to human life.*

*Literature can help to support a man or woman who has undergone a shattering experience. The victim of such crushing experience will definitley find in literature a replica of his or her person having had the same kind of bitter or agonizing experience. Grief and suffering can be allayed by the knowledge that others hava met equally fearful crises and survied.*

*Literature offers us sensitive and picturesque accounts of human behaviour. The reading of these accounts helps to increase our knowledge of ourselves, awareness of other people and insight into the society we live in.*

*Above all, literature is a source of pleasure. When we are engaged in reading an interesting book we forget this weary world and the humdrum life in it. We are transported to a new castle of happiness, built up by the imaginative work.*

*To sum up, literature is a reflector of life, a life-giving force, and an anodyne for mental ills.*

*(will be searialized in future issues)*

# A SPIDER WEB

Female spiders spin webs. Does it mean males are lazy wasterels like some in our homes? The material that makes the thread for spider's web is a liquid she produces from tiny spinning tubes. These tubes are found on small lumps on her body, known as SPINNERETS.

As soon as the liquid comes into contac, with air, it hardens and changes into thread. When a spider sets out to spin a wed she first uses a tough thread to build an outer frame in which she fits spokes, as in a wheel.

Next she starts from the hub to weave a spiral crossing the spokes about five times, just to keep them in position Then she b gins again at the outside rim to spin a complete spiral with finer silk, cutting away the 'Scalfolding' as she nears the centre.

Finally she constructs new support - lines for the finished web.

**V. Gowthaman**
*Gr de V*
*St John's College*
*Jaffna*

# மதிப்பாய்வு

'தேடல்' விஞ்ஞானச் சஞ்சிகை
விஞ்ஞான மாணவர் மன்றம்
யா / ஹாட்லிக் கல்லூரி,
பருத்தித்துறை - 1999
மலர் : ஒன்று
வெளியிட்ட தினம் : 11 - 05 - 99

ஹாட்லிக் கல்லூரி விஞ்ஞான மன்றத்தின் கன்னிப்படைப்பு - 'தேடல்' பொருத்தமான பெயர். புகழப்படவேண்டிய முயற்சி விவேகிகளின் ஆசி 'தேடல்' க்கு என்றும் கிடைக்கும்.

'இருதுருவ இயற்கை நிகழ்வுகளுக்கு ஈடுகொடுக்கும் பக்குவம் விஞ்ஞானக் கல்விக்கூடாக பிள்ளைகளிடம் ஏற்பட இடமுண்டு. 'பேராசிரியர் க. சின்னத்தம்பி' அவர்களின் நம்பிக்கை வீண் போகாது. விஞ்ஞான தகவல்களைச் சேர்ப்பது அவசியம். அதிலும் பார்க்க அவற்றின் மூலம் விஞ்ஞானக் கோட்பாடுகளை விளங்கிக்கொள்வது அவசியம். இவ்வாற்றலை வளர்க்கத் 'தேடல்' உதவும். திவ்விய எண்ணின் சிறம்பியல்புகளைத் தந்து, தர்க்கரீதியாக, அவற்றை நிறுவும் ஆற்றல் பாராட்டத்தக்கது.

எமது வளிமண்டலத்தைப் பற்றி எழுத முற்பட்ட சிரேஷ்ட விரிவுரையாளர் மாணவர்கட்கான ஒழுங்கமைப்பைக் கையாண்டு இலகுவாகத்தரும் திறன் மாணவர்களைக் கவரும் என்பதில் ஐயமில்லை.

மின்காந்தக் கதிர்ப்புக்கள் DNA இரேகைப் பதிவு போன்ற கட்டுரைகள் மாணவர்கட்கு மிகவும் அவசியமானவை.

அன்றைய சிந்து வெளி நாகரிகத்தைக் கொணர்ந்து சிலிக்கன் நாகரீகத்தை வெளிக் கொணரும் வேளையில் விளையும் 'ஒளியும், இருளும்' தரும் விளைவுகளை விமர்சித்தலில் ஓர் புதிய பார்வை.

ஆங்கிலக் கட்டுரைகள் சுருக்கமானவை அவற்றைத் தொடர்ந்து வரும் கட்டுரைகள் உபயோகமானவை. உலகம் புகழும் மாபெரும் கணிதமேதை நீண்டுவிட்டது. இதனால் மாணவரின் கவனத்தை ஈர்ப்பது சிக்கலாகிவிடும் கணனி பற்றிய பல கட்டுரைகள் மாணவர் கவனம் எங்கு செல்கிறதென்று காட்டுகின்றன. இடையிடையே விஞ்ஞான ரீதியான விகடத்துணுக்குகள் தொடர்ச்சியாக பல பக்கங்களில் பல பாகங்களிலும் பரவுவதைத் தடுக்கலாம்.

நான்கு டசினுக்குமதிகமான விளம்பரங்கள் வடமராச்சியிலுள்ள வணிகப் பெருமக்களின் வளத்தையும், தம் மக்கள் விஞ்ஞான அறிவில் வளர வேண்டுமென்ற அவர்களின் பேரூக்கத்தையும் காட்டுகின்றன. முகப்பு அட்டையைப் பார்க்குமிடத்து காலஞ்சென்ற கொழும்புப் பல்கலைக்கழக இரசாயனப் பேராசிரியரின் நினைவு வந்தது. அவரது குரல், 'அன்பான மாணவனே ஓர் இரசாயனப் பொருளைப் பரிசோதனைக் குழாயிலிட்டு சூடேற்றும் போது அதை உன் நண்பனை நோக்கிப் பிடிக்காதே அது (Homicide) கொலையாகிவிடும். உன்னை நோக்கிப் பிடித்துக் கொண்டும் சூடேற்றாதே - அது தற்கொலையாகிவிடும்.

தேடலின் தேடல் முயற்சி
மேலும் மேலும் வளர்வதாக.

'விஞ்ஞான பாட உள்ளடக்கத்திலும் பார்க்க விஞ்ஞானச் செயற்பாட்டுத் திறன்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படல் வேண்டும்.'

இதை யா / ஹாட்லிக் கல்லூரி இன்றுவரை பிரத்தியட்சமாகக் காட்டியுள்ளது. அடுத்த 'ஆற்றல்' இதழில் எந்தக் கல்லூரியின் விஞ்ஞான மன்றம் தமது மலரை மதிப்பாய்வு செய்யும் பங்கை எனக்கு அளிக்கப் போகிறதோ என்ற ஏக்கத்துடன் மதிப்பாய்வு நிறைவுபெறுகிறது.

---

## பிரச்சினை தீர்க்கும் ஆற்றல்

( D பக்கத் தொடர்ச்சி )

டங்கள், ரூபா எடுத்துக் கொண்ட நேரம் விஜி, உஷா ஆகியோர் ஓடி முடிக்க எடுத்துக் கொண்ட மொத்த நேரத்திற்கு சமம்

1) A 2) B 3) C 4) D 5) E *

12. பொதுச் சதாரணப் பரீட்சை முதன் முதலாக எப்போது நடைறெும்

1) 2000 ம் ஆண்டின் போது ஓகஸ்ற் மாதம் 18 ம் திகதிக்கும் 20 ம் திகதிக்குமிடையே உள்ள ஒருநாளில் நடைபெறும் 20 ம் திகதி ஞாயிற்றுக் கிழமையாகும்
2) அது ஞாயிற்றுக் கிழமை நடை பெற மாட்டாது

1) A 2) B 3) C 4) D * 5) E

13. ரமபாவின் திருமணம் எப்போது நடைபெறும்

1) இந்த ஆண்டு நவம்பர் மாதம் திங்கட் கிழமைக்கும் புதன் கிழமைக்கும் இடையே உள்ள ஒரு நாளில் நடைபெறும் திங்கட் கிழமை கரிநாள் ஆகும்
2) ரம்பாவின் திருமணம் கரிநாளில் நடைபெற மாட்டாது

1) A 2) B 3) C 4) D * 5) E

## தவத்திரு தனிநாயகம் அடிகள்

(2 ம் பக்கத் தொடர்ச்சி)

அவரே. கிரேக்க இலக்கியத்திற்கும், தமிழ் இலக்கியத்துக்கும், உள்ள தொடர்பை ஆராய்ந்த அவர் கிரேக்க இலக்கியத்தில் அவலச்சுவை இருப்பதைப் போல் சங்க இலக்கியத்திலும் நிறைய இருப்பதாகத் தெளிவுபடுத்தினார்.

'அற்றைத் திங்கள் அவ் வெண் நிலவன்
எந்தையும் உடையேம் எம் குன்றும் பிறர்
(கொளார்
இற்றைத் திங்கள் இவ்வெண் நிலவன்
வென் நெறி முரசின் வேந்தர் எம்
குன்றும் கொண்டார் யாம் எந்தையும்
இலமே'

என்னும் புறநானூற்றுப் பாடலும்,

'வல்வேற் சாத்தன் மாய்ந்த பின்றை
முல்லையும் பூர்த்தியோ ஒல்லையூர் நாட்டே'

என முடியும் புறப்பாட்டையும் அடிகளார் பெரும்பாலும் கூறுவதுண்டு.

வர்த்தகத்திற்கு ஆங்கிலமும் - அரசியலுக்கு பிரெஞ்சும் - காதலுக்கு இத்தாலியும் - தத்துவத்திற்கு ஜேர்மனும் எப்படி பிரபல்யமோ, அதே போன்று பக்திக்குத் தமிழ் என்பார். இது அனைத்து மொழிகளுடனும் தமிழிசை ஒப்புநோக்கி ஆராய்ந்துள்ளமையைப் புலப்படுத்துகின்றது.

மேல்நாட்டு மொழி ஆராய்ச்சியாளர்கள் இலக்கிய ஆய்வாளர்கள் இந்தியப் பண்பினை அறிய வடமொழி இலக்கியத்தை மட்டுமே கற்கிறார்கள். தமிழ்மொழியினதும் இலக்கியம் கலைகளது தனித் தன்மையை இவர்களுக்கு உணர்த்துவாரில்லை.

இந்நிலையில், இந்திய மொழி என்றால் சமஸ்கிருதம்; நாடு என்றால் சிந்து கங்கைப் பெருவெளி; கலைகள் என்றால் வடநாட்டுக் கலைகள்; இந்திய நகரங்கள் என்றால் பம்பாய், டில்லி, கல்கத்தா என்று எண்ணிக் கொண்டிருக்கும் மேற்கு உலகத்திற்கு தமிழ்மொழியின் வியத்தகு இயல்புகளையும், தமிழர் தம் இயற்கை ஈடுபாட்டினையும், இலக்கணம் என்பவற்றையும் சுவைபட எடுத்தியம்பி தமிழின் சிறப்பை மேலைத்தேய அறிஞர்கள் புரிந்து கொள்ளச் செய்தவர் அடிகளாரே.

1964 ஜனவரியில் கிழ்த்திசைக் கலைஞர்களின் 26 வது மகாநாடு டில்லியில் நடைபெற்றது. இதில் சுமார் 15 நாடுகள் கலந்து கொண்டன. இதனைப் பயன்படுத்தி 'உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தை' நிறுவத் திட்டமிட்ட தனிநாயகம் அடிகள் 7. 1. 1964 - ல் உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தை நிறுவினர். பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த அறிஞர் ஃபிலியோசா அதன் தலைவராகத் தெரிவானார். மன்றம் அமைக்கப்பட்டவுடன் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டைக் கூட்டுவதற்கான பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு 1966 - ல் கோலாலம்பூரில் அதனை உலகம் வியக்கும் வண்ணம் நடாத்தி முடித்தார்.

மாநாட்டைத் தொடக்கிவைத்த மலேசியப் பிரதமர் டாக்டர் துங்கு அப்துல் ரகுமான் பின் வருமாறு அவருக்குப் புகழாரம் சூட்டினார்.

' எமது பல்கலைக்கழகத்தின் இந்தியத்துறை பன்மொழிப் புலமையும் பரந்த மனப்பாங்கும் கொண்ட அறிஞரைத் தலைவராகக் கொள்ளும் பேறு பெற்றுள்ளது. பல்கலைக்கழக களைப்புலத் தலைவர் பேராசிரியர் தனிநாயகம் அடிகளாரையே நான் குறிப்பிடுகிறேன். அவருடைய தலைமை தான் இந்த மாநாட்டை மலேசிய பல்கலைக்கழகத்தில் கூட்டுவதற்கு வழிவகுத்தது ' என்பதை ஆணித்தரமாக எடுத்துக் கூறினர் பிரதமர் துங்கு அப்துல் ரகுமான்.

இறுதியாக பண்டிதர் கா. பொ. இரத்தினம் வேலணையில் நடாத்திய இருபதாவது திருக்குறள் மாநாட்டில் கலந்து தமது அயராதபணியை நிறைவு செய்தார். இங்கு ஆற்றிய உரையே அவரின் இறுதியுரையாகவும் இருந்தது.

'அரசுகளும், பல்கலைக்கழகங்களும் செய்ய முடியாத தமிழ்த் தொண்டினைச் செய்த தனிப் பெரும் தமிழ்த் தொண்டர்' அவரென ஊர்காவற்துறை பா. உ. பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவரது மறைவு குறித்து அனுதாபப் புத்தகத்தில் குறிப்பிட்டிருந்தமை கவனிக்கப்பட வேண்டியது.

ஒரே சமயத்தில் தனிநாயகம் அடிகளார் சென்னை அண்ணாமலை கோலாலம் பூர் பல்கலைக் கழகங்களில் Moderator ஆகவும் பணியாற்றினார் எனவும் அறியப் படுகிறது.

தமிழ்மீது கொண்டிருந்த பற்றுப் போல் தனது சொந்த ஊராகிய நெடுந்தீவின்மீதும் அவர் மிகுந்த பற்றுக் கொண்டிருந்தார்.

நெடுந்தீவுப் பாடசாலைகளின் கல்வி நிலை, போக்குவரத்துக்கள் குறித்த தகவல்களை அறிவதில் அவர் காட்டிய ஆர்வம் இன்றும் எம் மனதில் நிற்கிறது.

தமிழுக்கும், சமயத்திற்கும் தன்னை அர்ப்பணித்த தவத்திரு தனிநாயகம் அடிகளார் தமிழுள்ள வரை வாழ்வார் என்பது நிச்சயமானது.

> உண்மைக்காக எதையும் துறக்கலாம்.
> ஆனால், எதன் பொருட்டும் உண்மையைத் துறக்கக் கூடாது.
>
> விவேகானந்தர்

சிறுகதை

# ஒரு குரலில் விழித்தவர்

செல்வி க. ஷாமினி
நோண்டாவில்

'சண்முக மண்ணோய்ய்ய்...'

'சண்முக மண்ணோய்ய்ய்...', தருமன் அதி காலையில் அலறுகின்றான். சண்முகமோ கும்பகர்ண நித்திரை.

கொழும்புத்துறை கடலோரப் பகுதியில் வாழும் மீனவக் சமூகம். இருவர், மூவராக கூட்டு முயற்சியில் கடல் தொழில் செய்வது வழக்கம்.

தருமன் வெத்திலை குதப்பும் இளைஞன். அறுபது வயதிரனான 'சண்முகம் அண்ணை' அவனது சோடி. வழமை போல் சண்முகம் அண்ணை வீட்டு வாசலில் நின்று மீண்டும் கத்தினான், 'சண்முக மண்ணோய்'.

இவ் அலறலைக் கேட்டு, இரு தெருக்களுக்கு அப்பால் வசித்த கிழவன் சண்முகமும் வந்து சேர்ந்தார். விடிவெள்ளி மறையும் போல தோன்றவே, அவர் உரிமையுடன் வீட்டினுள் புகுந்து, கும்பகர்ண சண்முகத்தை உசிப்பி விட்டார். திடுக்கிட்டு எழும்பிய சண்முகம், முணடியடித்துக் கொண்டு, வீதிக்கு வந்து, ஓட்டமும் நடையுமாக தமது வள்ளத்தை நோக்கி விரைந்தான்.

நங்கூரம் இழுத்து, வள்ளத்தை தாங்கிச் சென்று கடல் ஓட்டத்தை அடைந்தனர். பாய் இழுத்த பின், சற்று ஆசுவாசமாக, வெற்றிலை போடத் தொடங்கினார்.

'அட தம்பி தருமன்,' என சண்முகம் பிரகாசமாக தொடங்கி, 'பாத்தியேடா, இண்டைக்கு நான் ஒரு குரலிலை எழும்பீட்டன்!'

தருமன் வாய்விட்டு சிரிக்க, வெற்றிலை புரையேற, அவன் 'ஃஹாாா' வென்று, அடக்க முடியாது, குதப்பலால சண்முகத்தை அபிஷேகித்தான்.

---

## ஒரு வார்த்தை

(10 - ம் பக்கத் தொடர்ச்சி)

தில் கையெழுத்திட்டுள்ளனர் என்றால் பாருங்களேன்!

பொதுவாக இலக்கணம் யாருக்குத் தான் பிடிக்கும்? இருந்தும், பாஷைக்கு அது மிகவும் முக்கியம் ஆகவே, Formal Grammar இல்லாது Functional Grammar மட்டுமே அடங்கிய 'ஆங்கிலம்' அடுத்த இதழில் தொடங்கும்.

நன்றி.

வா. கலாதரன், ச புவனேஸ்வரன்
உதவியுடன்
பென் அங்கிள்.

---

## பிரச்சினை தீர்க்கும் ஆற்றல்

10 - ம் பக்கத் தொடர்ச்சி

9. வேறுபாடாய் அமையும் மலர்
   1) தாமரை
   2) அல்லி
   3) ஆம்பல்
   4) குமுதம்
   5) றோசா *

10 வேறுபாடாக அமைந்த மனிதர் பின்வருபவர்களில் யார்?
   1) ஜோன் கெனடி
   2) வூட்றோ வில்சன்
   3) ரூமன்
   4) ஆபிரிகாம் லிங்கன்
   5) * வின்சன் சேர்ச்சில்

11. 5000 m ஓட்டப் போட்டியில் ஓடி முடிக்க ரூபா எடுத்துக் கொண்ட நேரம் என்ன
   1) ரூபா, விஜி, உஷா, ஆகியோர் போட்டியில் ஓடி முடிக்க எடுத்துக் கொண்ட நேரம் சர்வ சமமானவையல்ல
   2) விஜி, உஷா, நிலா ஆகியோர் ஓடி முடிக்க எடுத்துக் கொண்ட மொத்த நேரம் 45 நிமி

( தொடர்ச்சி B பக்கம் பார்க்க )

---

## *Why we make mistakes in our observations :*

# Love, Crime, Judgement etc.

*Psychologists have a word: CLOSURE When the human eye sees what is only five-sixths 5/6. of a circle, and the Brain misreads the message! It assumes the entire circle is present. Thus perceptions become a function of one's expectations.*

*This means the eye sees little and the Brain imagines the rest. Thus we get a picture which is actually not there. In other words we 'believe' what we 'like' to believe.*

*No wonder we make mistakes.*

**Miss Jereka Jegatheeswaran**
**Murugan Lane, East Urumpirai**

## தலைமைத்துவம்

(13 - ம் பக்கத் தொடர்ச்சி)

தேவைப்படாது. இதனால் முகாமையாளர் இக் கட்டத்தில் Low task and Low relationship என்ற பாங்கினைப் பின்பற்றுவார்.

இந்த வகையில் ஊழியரது முதிர்ச்சிக்கேற்ப தலைமை வகித்தல் மந்தமடையுமென Hersey and Blanchard குறிப்பிடுகின்றனர்.

### 1. 4. 3 தலைமைத்துவப் பாங்குக் கோட்பாடு Leadership Style Theory

Huneryager, Heckman (1967) ஆகிய இவர்களது கருத்துப்படி நிறுவனங்களில் பின்வரும் நான்கு வகையான தலைமைத்துவம் காணப்படுவதாகக் கொள்ளப்படுகின்றது:

1. சர்வாதிகாரத் தலைமைத்துவம் (Dictorial Leadership)
2. ஏகாதிபத்தியத் தலைமைத்துவம் (Authoritatiau Leadership)
3. ஜனநாயகத் தலைமைத்துவம் (Democratic Leadership)
4. தலையீடற்ற தலைமைத்துவம் / கட்டுப்பாடற்ற தலைமைத்துவம் (Laissez fairz Leadership)

### 1. 4. 3. 1 சர்வாதிகாரத் தலைமைத்துவம் Dictatorial Leadershid

இத்தகைய தலைமைத்துவத்தில் முகாமையாளர் பணியாளர்களுக்கு தண்டனை வழங்கி அவர்களைப் பயமுறுத்தி வேலைசெய்விக்கின்றனர். இத்தகைய தலைமைத்துவத்தினை நிறுவனங்களில் காண்பது அரிது. எனினும் சில அரச அமைப்புக்களில் இது காணப்படுகின்றது.

### 1. 4. 3. 2 ஏகாதிபத்தியத் தலைமைத்துவம் (Authoritatian Leadership)

இங்கு தீர்மானமெடுக்கும் அதிகாரம் முகாமையாளரிடமே காணப்படும் ஊழியர்களின் ஆலோசனைகள் இங்கு பெறப்படுவதில்லை இங்கு முகாமையாளர் இடுகின்ற கட்டளைகளை ஊழியர் நிறைவேற்ற வேண்டுமென எதிர்பார்க்கப்படுவர். இங்கு முகாமையாளரே தனியத் தீர்மானத்தை எடுப்பதால் விரைவாகத் தீர்மானமெடுக்க முடியும். எனினும் ஊழியா இத்தகைய தலைமைத்துவ பாங்கை விரும்பமாட்டார்கள் இதனால் அவர்களுக்கு ஊக்குவிப்பு இருக்க மாட்டாது மேலும் எதிர்காலத்தில் தலைமைத்துவப் பதவிகளை வகிப்பதற்குத் தயார்படுத்தப்பட மாட்டார்கள்.

### 1. 4. 3. 3 ஜனநாயக ரீதியான தலைமைத்துவம் (Democratic Leadership)

இது பங்குபற்றும் தலைமைத்துவம் எனவும் அழைக்கப்படும். இங்கு தீர்மானம் எடுக்கும் செய்முறை பரவலாக்கப்பட்டிருக்கும். அதாவது முகாமையாளர் ஒருதலைப்பட்சமாக தீர்மானங்களை எடுப்பதற்குப் பதிலாக அவர் தனது உதவியாளர்களையும் தீர்மானம் செய்தலில் பங்குபற்ற வைத்து அவர்களது ஆலோசனைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பார்.

(அடுத்த இதழில் தொடரும்)

---

## முயற்சித் திட்டம்

3 - ம் பக்கத் தொடர்ச்சி

தொகை ரூபா 3000 மேற்படாது.

இரு வருடங்களில் கடன் அடைக்கப்படல் வேண்டும்.

ரூ: 10000 கடனாயின் மாதாந்தம் வட்டி ரூ 100 கட்டவேண்டும்.

(12 % வட்டி) தவறின் 14 % வட்டி அறவிடுவர்

### இலங்கை வங்கி

சிறுதொழில் முயற்சி அபிவிருத்திக்கான விரிவுபடுத்தப்பட்ட கடன் திட்டம் (சி. தொ. க ரூ 10000 தொடக்கம் ரூ. 25000 வரை எல்லை தனியாளோ குழுக்களோ மனுச் செய்யலாம்.

முக்கிய குறிப்புக்கள் :

தற்போதைய மாதாந்த வருமானம் மாதாந்த செலவினங்கள் சொந்தமான சொத்து விபரம்.

திட்டத்தின் வகை - இடம்
திறமை - அனுபவம் பயிற்சி
மூலப்பொருட்கள்
ஏனைய வசதிகள் - நீர் மின்வலு
சந்தை வாய்ப்பு
மீளச்செலுத்தும் வகை, காலம் - மாதாந்தம் ரூ 200
(கருணைக் காலம்)
தயவுநாட்கள் (Grace Pereod)
பிணையாளியின் விபரம்
நிதியியல் திட்டம் Business Plan
எனவே இவ்விரு வங்கிகளும் திட்டவட்டமான ஓர் முயற்சித்திட்டத்தை
முழுமையாக எதிர்பார்க்கின்றன.
ஆவணி இதழில் ஓர் 'மாதிரி' முயற்சித் திட்டத்தை தரவுள்ளோம்.

குறிப்பு :

ஆற்றல் மேம்பாட்டு ஒன்றியம் சிறுமுயற்சியில் ஈடுபடுவதற்கான பயிற்சி நெறியொன்றையும் நடைமுறைப்படுத்தவுள்ளது. இது முக்கியமாக பாடசாலையிலிருந்து விலகியவர்களுக்காகவே அமைக்கப்படும்.

பயிற்சிநெறியில் சேரவிரும்புவோர் எவ்வகைப் பயிற்சி தமக்குத்தேவை என்ற விபரங்களுடனும் சுயவிபரக் கோவையுடனும் மனுச்செய்க.

- ஆசிரியர்

# ஒரு வார்த்தை

ஐந்து மாதங்கள் முன்னர், பன்னிரெண்டு பக்கங்களாக தொடங்கிய 'ஆற்றல்' ஐந்தாவது இதழிலேயே இருபத்துநான்கு பக்கங்கள் கொண்டதாக வளர்ந்துள்ளது. காரணம்? ஆசிரிய, மாணவ, மாணவி சமூகத்தினரது உற்சாகமான வரவேற்பும், ஒத்துழைப்புமே!

'ஆற்றல்' மென்மேலும் வளர்ந்து, பரவலாக, சகல மாணவரிடமும் சென்றடைய வேண்டும் என்பதே எமது குறிக்கோள்.

நாம் ஆறாயிரம் பிரதிகளே, இலாபம் இல்லாது, பதிப்பிக்கின்றோம். இத்தொகை எமது மாணவ சமுதாயத்தினருக்குப் போதுமானதல்ல. ஆகையால், ஏமாற்றத்தைத் தவிர்ப்பதானால், முன் கூட்டியே தங்களது தேவையை எமக்கறியத் தாருங்கள்.

'ஆற்றல் மேம்பாட்டு ஒன்றியம்' தனது முதலாவது ஆண்டு விழாவினை எதிர் வரும் ஐப்பசி (October) மாத இறுதியில் கொண்டாடவுள்ளது. ஆகவே ஐப்பசி மாத இதழ் சிறப்பிதழாக, கூடிய பக்கங்கள் கொண்டதாக, வெளிவரும்.

ஆசிரியர்களும், மாணவர்களும் தாராளமாக எழுதுங்கள். தங்களது படைப்புகளை ஐப்பசி 10-ம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்புங்கள்.

ஆண்டு விழா ஞாபகார்த்தமாக, கொத்தணி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில், 'பொது அறிவுப் போட்டிப் பரீட்சை' ஒன்றினை நடாத்த உத்தேசித்துள்ளோம். ஆற்றல் சஞ்சிகைகளில் வெளிவந்த விடயங்களும், சம கால செய்திகளும் (Current Affairs) மட்டுமே வினாக்களில் அடங்கும்.

பாடசாலைகளில் 'ஆற்றல் மாணவ வட்டம்' ஆரம்பிக்க எண்ணியுள்ளோம். பாடசாலைக்கு மூவராகவும், ஓர் ஆசிரியர் ஆலோசகராகவும், அமைவர். இவர்கள் பிரசுரிக்க ஆக்கங்களை தெரிவு செய்வதிலும், ஆற்றல் விநியோகத்திலும் ஈடுபடுவர். மேலதிக விபரங்கள் அதிபர்களுக்கு அனுப்பியுள்ளோம்.

ஆடி / July மாத இதழில் வேம்படி மகளிர் கல்லூரியினது வெளியீடான 'அரும்பு' எமது ஆலோசகரால் மதிப்பாய்வு செய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து 'தேடல்' என்னும் பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி மாணவர்களது படைப்பினை இம் மாதம் மதிப்பாய்வு செய்துள்ளார்.

பாடசாலைகளது வெளியீடுகளை எமக்கு அனுப்பி வைத்தால், நாம் அவைகளது மதிப்பாய்வு ஒன்றினை ஆற்றல் மூலம் ஏனைய பாடசாலைகளுக்கு அறியத் தருவோம்.

தமிழுடன் 'ஆங்கிலம்' கலந்து சுவையுடன் ஊட்ட எண்ணினேன். இதனை எதிர்த்து இருவர் எழுதினர். இவர்களது கடிதங்களை பிரசுரித்து, எழுதுவதையும் நிறுத்தினேன்.

ஆனால், அமைதியாக ஆமோதித்தோர் எனது கோழைத்தனத்தைக் கோவமுற்றுக் கண்டித்தனர். பலர் தனிப்பட்ட முறையில் வைதனர். பதினெட்டு நபர்கள் ஒரே கடிதத்

(தொடர்ச்சி D பக்கம் பார்க்க)


**சந்தா விபரம்**

சந்தாதாரர்களாக சேருங்கள்! மாதா மாதம் 'ஆற்றல்' அச்சகத்தில் இருந்து நேரடியாக உங்களைத் தேடி வரும்.

பாடசாலை விடுமுறை நாட்களில் உங்களது வீடுகளுக்கு ஓடி வரும். பாடசாலை மீளத் தொடங்கும் வரை நீங்கள் காத்திருக்கத் தேவையே இல்லை.

ரூபா 85 / மட்டும் செலுத்தினால் 12 மாதங்கள் 'ஆற்றல்' உங்களை வந்தடையும்.

பொருளாளர்,
ஆற்றல் மேம்பாட்டு ஒன்றியம்,
76, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

என்னும் விலாசத்திற்கு :

சுண்டிக்குளி தபால் அலுவலகத்தில்

மாற்றக் கூடிய Money Order அனுப்புங்கள்.


யாழ்ப்பாணம், சுண்டிக்குளி 76, கண்டி வீதியிலுள்ள யாழ் ஆற்றல் மேம்பாட்டு ஒன்றியத்திற்காக QBன் அபிலொசிஸ், யா... ச. புவனேஸ்வரன் ஆகியோரால் வெளியிடப்பட்டது.
அச்சுப்பதிவு : முல்லை அச்சகம், ஆடியபாதம் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

33811